கம்பன் பாடிய

பிரகலாத சரித்திரம்



சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

11. யானையும், யானைக் கதையும்

'சேதமெல்லாம் அரசாங்கத்துக் கொலைக் கருவிகளுக்குத் தான்; பிள்ளைத் திருமேனிக்கு அல்ல' என்றார்கள். 'தள்ளுங்கள் நெருப்பிலே' என்ற கட்டளைக்குப் பின், 'விறகுகளுக்குச் சேதம்; எண்ணெய் முதலிய பொருள்களுக்கும் சேதம்!' என்றார்கள்.

'எட்டுப் பாம்பையும் விட்டுப் பாருங்கள்' என்ற இரணிய கர்ஜனைக்குப் பின், 'அனந்தன் முதலான மகா நாகங்களின் பல்லுக்குத் தான் சேதம்!' என்றார்கள்.

'தங்கள் சொல்லுக்கும் சேதம்!' என்றுதான் சொல்லத் துணியவில்லை.

இரணியனு தோல்வியை ஒப்புக் கொள்கிறவன்? 'மன்னன் சொல்லுக்கு மறு சொல் உண்டா? என் சொல்லே வெல்லும்!' என்ற நம்பிக்கையை இன்னும் இழந்து விடாமலே,

'வேழத் துக்(கு)இடு
மின்'என விட்டான்.

[வேழத்துக்கு – யானைக்கு; இங்கே ஐராவத யானைக்கு. இடுமின் – இடுங்கள். என விட்டான் – என்று கட்டளையிட்டு அனுப்பினான்.]

யானைத் தண்டனை

'திக்கின் ... வேழத்துக்கு' என்று பொதுவாகத் தான் இரணியன் சொன்னான். ஆனால் அசுரர்கள் அர்த்தக் குறிப்பை அறிந்து கொண்டு கிழக்குத் திக்கிலே சென்றார்கள். அந்தத் திக்குப் பாலகனான இந்திரனிடம் இரணியன் கட்டளையைத் தெரிவித்தார்கள், கொஞ்சமும் பசையில்லாத மனத்துடன்.

கட்டளையைக் கேட்ட மாத்திரத்தில் இரணிய பயத்தால் இந்திரன் விரைவாகத் தன் ஐராவத யானையைக் கொடுத்து விட்டான். யானை வரும் முன்னே பிரகலாதனைக் கைகளிலும் கால்களிலும் மார்பிலும் கழுத்திலும் கட்டி விட்டார்கள்.

இரணிய பயத்தால் ஐராவதம் மத மயக்கமடைந்து வந்து கொண்டிருக்கிறது. கயிறுகளால் இறுகக் கட்டிய பிள்ளையை அந்த யானையின் எதிரில் போட்டுவிடுகிறார்கள்.

அந்த நிலையையும், அப்போது பிரகலாதன் என்ன செய்கிறான் என்பதையும் இச் செய்யுளில் காணலாம்:

கையில் கால்களில்
மார்பு கழுத்தில்
தெய்வப் பாசம்
உறப்பிணி செய்தார்,
மையல் – காய்கரி
முன்னுற வைத்தார்;
பொய்யற் றானும்
இ(.து)ஒன்று புகன்றான்.

[தெய்வப் பாசம் உறப் பிணி செய்தார் – தெய்வக் கயிறுகளால் இறுகக் கட்டி. மையல் – மயக்கம்; (இங்கே) மதமயக்கத்தை உடைய. காய் – கோபிக்கிற. கரி முன் – யானையின் எதிரில். உற – பொருந்த.]

மத மயக்கத்திலே இன்னது செய்கிறோம் என்பதை அறியாமலே கோப வெறி கொண்டு வருகிறது ஐராவத யானை. பிரகலாதனோ பொய்யான படாடோபங்களை எதிர்க்காமலே எதிர்த்து நிற்கும் 'சத்தியாக்கிரகி' யல்லவா!

இந்த நிலையைக் குறிக்கப் பிரகலாத னைப் 'பொய்யற்றான்' எனக் காட்டு கிறது செய்யுள். இந்தப் 'பொய்யற் றான்' இப்போது சொல்வது தான் என்ன?

'எந்தாய்! பண்டோர்
இடங்கர் விழுங்க,

முந்தாய் நின்ற
முதற்பொருளே! என்(று)



உந்தாய் தந்தை
இனத்தவன் ஓத

வந்தான் என்தன்,
மனத்தினன்' என்றான்.

[எந்தாய் – எமது தலைவனே. பண்டு ஓர் – முன்பு ஒரு. இடங்கர் – முதலை. முந்தாய் நின்ற–மூல காரணமாய் நின்ற. முதற் பொருளே – முதன்மையான பொருளே. உந்தாய் தந்தை இனத்தவன் – உன்னுடைய தாய் தந்தையரின் இனத்தவனான கஜேந்திரன். வந்தான் – வந்தவன்.]

கஜேந்திரன் கதை

புராண உலகில் மிகவும் பிரசித்த மானது இக்கதை. யானையாகக் காட்டில் சஞ்சரித்துக் கொண்டிருந்த போதிலும் கஜேந்திரனுக்கு விஷ்ணு பக்தி இருந்த தாம். நாள்தோறும் ஆயிரம் தாமரைப் பூக்களைக் கொண்டு திருமாலைப் பூசித்து வந்தது இந்த யானை.

ஒரு நாள் பெரிய தொரு தாமரைத் தடாகத்தைக் கண்டது. அழகாய் மலர்ந் திருந்தன தாமரைப் பூக்கள். இவற்றைக் கண்டதும், 'பகவானுக்கு அர்ச்சனை செய்யலாமே, இந்தப் பூக்களைக் கொண்டு' என்ற எண்ணம் தோன்றி யது.

தடாகத்தில் யானை இறங்கியது, பூப் பறிக்க. இந்த யானையின் காலை ஒரு பெரிய முதலை கவ்விக்கொண்டது. யானை யால் விடுவித்துக் கொள்ள முடியவில்லை. போராடிப் பயனில்லை.

இந்த நிலையில் 'ஆதிமூலமே!' என்று கூவியழைத்தது யானை. உடனே திரு மால் கருடாரூடனாக வந்து சக்கரத் தைப் பிரயோகித்து முதலையைத் துணித்து யானையை விடுவித்தான். இந்தக் கதையைத்தான் பிரகலாதன் குறிப்பிடுகிறான்.

தன்னைக் கொல்ல வந்த ஐராவதத்தை நோக்கிப் பிரகலாதன், 'உன் இனத்தா னாகிய அந்தக் கஜேந்திர யானைக்கு ஆபத்து வந்த அந்தக் காலத்திலே, அது எந்த ஆதிமூலப் பொருளைக் கூவி யழைத்து விடுதலை பெற்றதோ, அதே ஆதிமூலம்தான் வந்திருக்கிறது என் மனத்திலும்!' என்கிறான். இது கேட்ட ஐராவத யானை பிரகலாதனுக்கு இடர் செய்ய வில்லையாம்.

தன்னுடைய நெற்றிப் பட்டம் தரை யில்படும்படி பிரகலா தனைத் தொழுது, பய பக்தியுடன் விலகிப் போய் விடுகிறதாம்:

என்னா முன்னம்
இருங்களி றும்தன்

பொன்னார் ஓடை
பொருந்த நிலத்தின்

அன்னா னைத்தொழு(து)
அஞ்சி அகன்ற(து);

ஒன்னார் அத்திறம்
எய்தி உரைத்தார்.

[என்னா முன்னம் – என்று பிரகலாதன் சொன்னவுடனே. இருங்களிறும்–அந்தப் பெரிய யானையும். பொன் ஆர் – பொன் னினால் அமைந்த. ஓடை – நெற்றிப் பட்


டம். பொருந்த நிலத்தின் – நிலத்தில் பொருந்தும்படி. அன்னானை – அந்தப் பிரகலாதனை. அகன்றது – விலகிப் போயிற்று. ஒன்னார் – பகைவரான அசுரர்கள். அத்திறம் – அந்தத் தன்மையை. எய்தி–இரணியனை அடைந்து.]

தன் இனத்தானுக்கு உதவிய ஆதிமூலம் பிரகலாதன் உள்ளத்தில் இருப்பதைக் கேள்விப்பட்டதும், தன் மத மயக்கத்தைத் துறந்து, இரணிய பயத்தையும் மறந்து, பிரகலாதனைத்தொழுது அஞ்சி அகன்றதாம் ஐராவதம். 'கஜேந்திர மோட்சம்' என்ற இந்தக் கதையைக் கம்பன் வேறு இடங்களிலும் பயன்படுத்திக் கொண்டிருக்கிறான்.

பொதுவாகத் திருமாலே ஆதிமூலமான பரம்பொருள் என்பதை வெளியிடுகிறது இந்தப் புராணக்கதை என்பதில் ஐயமில்லை. யானையை முதலை வாயிலிருந்து விடுவிக்க விரைந்து வந்தபரம்பொருள் எந்த ஆபத்துக் காலத்திலும் நம்பியவர்களைக் கை விடாது என்ற உண்மையும் சிறப்பாக உணர்த்தப் படுகிறது இக்கதைவாயிலாக.

ஒரு நீர்நிலையில் ஒரு முதலையின் பிடியிலிருந்து ஒரு யானையை விடுவித்த முழுமுதற் கடவுள், ஸம்ஸார சமுத்திரத்திலே ஐந்து முதலைகளாகக் கவ்விக் கொண்டிருக்கும் ஐம்புலன்களின் முதலைப் பிடியிலிருந்து ஒவ்வொரு மனிதனையும் காப்பாற்றச் சித்தமாயிருக்கிறான் என்பர் மெய்யறிஞர். பக்திதான் வேண்டும், நம்பிக்கை தான் வேண்டும் என்பர்.

இந்த யானைக் கதையைப் பக்த ரஸிகர்கள் எப்படி யெல்லாம் அனுபவித்திருக்கிறார்கள், ஆயிரம் தாமரைப் பூக்களைக் கொண்டு இறைவனை வழிபடத் துணிந்த யானை 999 பூக்களையும் இறைவனைத் தியானித்து அவன் எதிரே நிற்பதாகப் பாவித்துக் கொண்டு அந்தத் திருவடிகளில் அர்ச்சனை செய்து விட்டதாம். கடைசியாக ஆயிரம் என்ற அந்தத் தொகையைப் பூர்த்தி செய்யப் போகும்



பூவைப் பறித்துக் கொண்டதும் முதலை பிடித்துக் கொண்டதாம்.

அந்த நிலையில் போராடிய யானைக்குத் தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் கூட இல்லையாம். தன் கைங்கரியம் பூர்த்தியாக வேணும் என்ற ஒரே எண்ணம் தான். 'ஒரே கவலை' என்று கூடச் சொல்லக் கூடாது. கடவுளை நம்புகிறவனுக்குக் கவலை ஏது! கவலை இருந்தால் கடவுள் நம்பிக்கை இல்லை யென்று தான் பொருள்!

எனவே, யானை கவலையின்றியே கைங்கரிய நிறைவு ஒன்றையே சிந்தனை செய்ததாம். அவ்வளவு போராட்டத்திலும் தும்பிக்கையிலிருந்த அந்தக் கடைசிப் பூவை நழுவ விட்டு விடாமல் ஜாக்கிரதையாக வைத்துக் கொள்ள விரும்பியது.

அந்தப் பாரத்தைப் பகவான் மீது போட்டு விட்டுச் சரணாகதி செய்வதற்கு அறிகுறியாக 'ஆதிமூலமே' என்று அழைத்ததாம். 'யானை ஏதோவீரிட்டது, அதைப் பகவான்தான் "ஆதி மூலமே" என்ற அழைப்பாக ஏற்றுக் கொண்டு வந்து தோன்றினான்' என்று கூடக் கூறுவதுண்டு.

பகவான் வந்து விடுவித்து அந்தத் தும்பிக்கையிலிருந்த கடைசி மலரைத் தம் திருவடிகளிலே இடச் செய்து அந்தக் கைங்கரியத்தைப் பூர்த்தி செய்து கொண்டானும், அப்போது அந்தப் பூ எவ்வளவோ போராட்டத்திற்கிடையே வாடி வதங்கிப் போகாமல், பறித்த போது இருந்த அந்தப் புதுமையழகுடனும் அதே புதிய மணத்துடனும் இறைவன் பொன்னடியில் விழுந்ததாம்; அந்தப் பொன்னடியை அழகு செய்ததாம்.

கைங்கரியமே நம் கண்ணும் கருத்துமாயிருக்க வேண்டியது. அதன் பலனைப் பற்றியோ, அது பூர்த்தியாக வேண்டுமென்பது குறித்தோ கவலை நமக்கு வேண்டியதில்லை. அக்கவலைச் சுமையை, அந்தப் பாரத்தை இறைவன் தலைமீதே சுமத்திவிடலாம் என்கிறது பக்தி மதம். எந்தக் கவலைச் சுமையையும் பக்தரது பூநெஞ்சு சுமக்க வேண்டியதில்லையாம்.

என்ன அழகான பக்திக் கொள்கை! 'நாஸ்திகர்களோ – பாவம்! — நெஞ்சில் கவலை மூட்டைகளைத் தாங்கித் திரிய வேண்டியதுதான்' என்று பரிதாபப்படுகிறது பக்தி.

இப்போது பாருங்கள். எவ்வளவு அழகான, ஆழமான, பக்தி – தத்துவத்தை வெளியிடுகிறது கஜேந்திரன் கதை என்பதை! கதையின் தத்துவம் எப்படியெல்லாம் வளர்ந்திருக்கிறது பாருங்கள்!

கதையின் தத்துவம் வளர்ந்திருப்பது போல் கதையும் வளர்ந்து வந்திருக்கிறது. யானையின் விஷ்ணு பக்திக்கு ஓர் 'ஆதி மூலம்' கற்பிக்க வேண்டுமென்று, விஷ்ணு பக்தியுள்ள ஓர் அரசனே யானையாகப் பிறந்தான் என்கிறது புராணம்.

பக்தன் ஏன், எப்படி மிருகமாய் பிறவியெடுக்க வேண்டும்! அது ஒரு சாபம் என்கிறது கதை.

அரசன் விஷ்ணு பூஜை செய்துகொண்டிருக்கிறான். அப்போது அவனிடம் வருகிறார் அகஸ்திய மகாமுனி. கண்ணையும் கருத்தையும் பூஜையில் ஊன்றி யிருந்ததால் முனிவர் வந்தது தெரியவில்லை. அவ்வளவு பக்தி, அத்தகைய ஒருமையுள்ளம்.

அத்தகைய பக்தியைப் பாராட்டுவதற்கு மாறாக, 'நம்மைக் கவனிக்கவில்லையே; நமக்கு உபசாரம் ஒன்றும் நடக்கவில்லையே!' என்ற கோபம் தான் ஏற்படுகிறதாம் மாமுனிக்கு. 'பிடி சாபம்' என்கிறார்.

"யானையாகக் கடவை!" என்று சபிக்கிறார். 'ஏன் யானையாக!' என்று கேட்டால் அதற்கும், புராணம் ரஸமாக விடை தருகிறது. யானை போலச் செருக்குற்றிருந்ததால். 'யானையாகக் கடவை' என்றாராம் முனிவர்.

இப்படிச் சபிக்கப் பெற்றாலும் யானைக்கு அந்தப் பூர்வ ஜன்ம வாசனையிருந்ததாம், பக்தியின் மகிமையால், சபிக்கப் பெற்றவனுக்கு அந்தச் சாபமும் ஒரு பேறுதானும். அந்தப் பேறுதானே பகவானைப் பிரத்தியட்சமாக்கிப் பூஜா கைங்கரியத்தையும் பூர்த்தி செய்து விட்டது!

யானைக்கு முற்பிறப்பு ஏற்பட்டது போல் முதலைக்கும் ஒரு முற்பிறப்பு உண்டு. கஜேந்திரன் முற் பிறப்பில் இந்த்ரத்யும்நன் (தமிழ் நாவிற்குச் சற்றுச் சங்கடம்தான்!' என்னும் அரசன் என்றால். முதலை ஒரு கந்தர்வனாக இருந்ததாம். கந்தர்வன் பெயர் ஹூஹூ என்கிறார் பௌராணிகர். ஆஹா!–கந்தர்வன் முதலையானது ஏன்!

அதுவும் ஒரு சாபம் தான். அந்த நீர் நிலையில் ஒரு முனிவன் நின்று தவஞ் செய்து கொண்டிருந்தானும். கந்தர்வன் தண்ணீரில் முழுகிப் போய் முனிவன் காலைப் பற்றி இழுத்தானும். 'முதலையாகக் கடவை' என்பதற்கு அகஸ்தியரைக் காட்டிலும் இம் முனிவருக்குச் சாப உரிமை இருக்கிற தல்லவா!

கம்பன் பாடிய பிரகலாத சரித்திரம்



சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

12. பக்தியே சக்தி

'கஜேந்திர' யானையின் கதை கேட்டுத் தேவேந்திரனது ஐராவத யானை அஞ்சி ஓடிய செய்தி, இரணிய வெஞ்சினத்திற்கு விறகாயிற்று; நெய்யாயிற்று.

'கொல்வீர்' என்றனன்
நெஞ்சு கொதிப்பான்.

இப்போது கொலைத் தண்டனை மகனுக்கன்று; யானைக்குத்தான்!

யானை தண்டிக்கப்படுகிறது!

'உறங்கிக் கிடப்பவனை யல்லவா மதித்தது இந்த யானையும்! எனது உறங்காப் புலி வீரத்தை இகழ்ந்து விட்டதே!' என்ற கொதிப்பு ஐராவதத்திற்கு மரண தண்டனை விதிக்கவே, கொலையாளிகளும் குதூகலமாய் நெருங்கி விட்டனர். பையனைத் தான் வதைக்க முடிய வில்லை! யானையை யாவது கொன்று இரணியனது கொலை வெறியை ஒருவாறு தணிக்க முடியாதா?'

ஆனால் இந்த எண்ணமும் பழுதாகிறது. ஏன்? எப்படி?

தன்னைக் கொல்லுநர்
சாருத லோடும்,
பொன்னைக் கொல்லும்
ஒளிப்புகழ் பொய்யா
மன்னைக் கொல்லிய
வந்தது, வாரா
மின்னைக் கொல்லும்
வெயிற்றின் எயிற்றால்.

[கொல்லுநர் – கொல்பவர்கள். சாருதல் – சார்தல்; நெருங்குதல். பொன்னைக் கொல்லும் ஒளிப் புகழ் பொய்யா மன் – பொன்னொளிக்கும் எவ்வளவோ மேலான மேனி யொளியும் பொய்யாத புகழுமுள்ள மன்னனாகிய பிரகலாதன். கொல்லிய – கொல்ல. வாரா – வந்து. மின்னைக் கொல்லும் – மின்னலைக் கீழ்ப் படச் செய்யும். வெயிற்று – வெயிலையுடையது. வெயிற்றின் எயிற்றால் – வெயிலொளியுள்ள தந்தங்களால்.]

இந்தப் பாட்டோடு அடுத்த பாட்டையும் சேர்த்து வாசிக்க வேண்டும்:

வீரன் திண்திறல்
மார்பினில் வெண்கோ(டு)
ஆரக் குத்தி
அழுத்திய நாகம்
வாரத் தண்குலை
வாழை மடல்சூழ்
ஈரத் தண்டென
இற்றன எல்லாம்!

[வெண் கோடு – வெண்ணிறமுள்ள தந்தங்கள். ஆரக் குத்தி–நன்றாகக் குத்தி. நாகம் – யானை. வாரத் தண்குலை – நாம் பிரியமாகக் கொள்ளுகிற செழிப்பான குலையையுடைய. மடல் – பட்டை.]

பிரகலாதன் மேனி உலகில் இல்லாததோர் ஆயிரத்தெட்டு மாற்றுத் தங்கமாக ஜொலிக்கிறதாம். ஐராவதத்தின் நான்கு தந்தங்களும் மின்னொளியையும் கீழ்ப்படுத்துகிற ஏதோ ஒரு வெயிலொளி போல் வீசுகிறதாம்.

யானை ஓடி வருகிறது, பிரகலாதன் மார்பை நோக்கிய வண்ணம். நன்றாகக் குத்தி விடுகிறது; நாலு தந்தங்களாலும் குத்தி அழுத்திவிடுகிறது. ஆனால் என்ன!

வாழைத்தண்டு பட்ட பாடுதான் ஐராவத யானைத் தந்தங்கள் படும் பாடும்! இவ்வளவு தானு வலிமை இந்த யானைக்கும், இதன் தந்தங்களுக்கும்! ஆனல் போராட்டம் சத்தியத்தோடல்லவா!

'வீரன் திண் திறல் மார்பு' என்று அந்தப் பொன்னைப் பழிக்கும் ஒளி மார்பினைச் சுட்டிக் காட்டுகிறன் கவிஞன். அன்பு மயமான, அருளொழுக்கமான, பக்தியே வீரம்—சக்தி மயமான சத்திய வீரம் என்பது குறிப்பு.

'ஐராவதத்திற்குத் தந்தங்கள் சேதம்; நம்மால் அல்ல; உன் பிள்ளையால் தான்! பிள்ளைக்கோ ஒரு சேதமுமில்லை!' என்று செய்தி சொன்னர்கள் அசுர கிங்கரர்கள் இரணிய எசமானிடம். வெகு விரைவாகப் போய்ச் சொல்லி விட்டார்கள், யானைக்கு எதிர்பாராத நிலையில் கிடைத்து விட்ட தண்டனையை!

கல்லைக் கட்டிக் கடலில் தள்ளு!

மிகவும் உக்கிரமான கோடை காலத்திலே இரண்டு சூரியர்கள் எழுந்தது போல ஜொலிக்கின்றன இரணியன் கண்கள். இந்த உக்கிரம் இரணியன் பேச்சிலும் எரிகிறது; வெடிக்கிறது படீரென்று;

'தள்ளத் தக்கில்
பெருஞ்சயி லத்தோ(டு)
எள்ளக் கட்டி
எடுத்து விசித்துக்
கள்ளத் திங்கிவ
னைக்கரை காணு
வெள்ளத்(து) உய்த்து
விடீர்' என விட்டான்.

[தள்ளத் தக்கில் – தள்ளத் தகாத; அசைக்க முடியாத. சயிலத்தோடு – மலையோடு. எள்ள – இகழ. விசித்து – இறுக்கிக் கட்டி. கள்ளத்து இங்கு இவனை – கொல்ல முடியாதபடி கள்ளத் தனமாகத் தப்பிப் பிழைத்துவரும் இந்தப் பிரகலாதனை. கரை காணு வெள்ளத்து – கரை காணுத கடல் வெள்ளத்திலே. உய்த்து விடீர் – தள்ளிவிடுங்கள். என விட்டான் – என்று சொல்லி அசுரர்களை ஏவி விட்டான்.]

உண்மையாகவே இரணியனது அதிகார முத்திரையுடன் படீரென்று வந்து விழுகிறது இப்பாட்டு. இதற்கு,

விடீர்என விட்டான்

என்று முடிவதே ஒரு தக்க சான்று.

தள்ளத் தக்கில்

என்று தொடங்கும் ஓசைப் பொலிவு, இசைவான எதுகைகளுடன், 'கள்ளப் பயலை வெள்ளத்திலே தள்ளு!' என்ற கர்ஜனையுடன் முடிகிறது.

'கட்டி யெடுத்து விசித்து' என்று உறுமுவதும், 'கள்ளத் திங்கிவனை' என்று நெஞ்சு பொருமுவதும் இடையே நிகழ்கின்றன.

கள்ளத் திங்கிவ
னைக்கரை காணு

என்பதில் 'காணு' என்ற நீண்ட ஓசையில் இரணியன் நெஞ்சு பொருமிப் பெருமூச்சு விடுவதும் புலனுகிறது.

இப்படி இந்தச் சர்வாதிகார முத்திரையுடன் வந்து விழுகிற பாட்டிலே கவிச் சக்கரவர்த்தியின் அதிகார முத்திரையும் பதிந்து கிடக்கிறது. ஆனல் இத்தகைய பாடல்கள் 'இரணியன் வதைப்படல'த்தின் முற்பகுதியில் அதிகமாய்க் காணப்படவில்லையே.

இரணியனது இந்தக் கட்டளையைக் கேட்ட அசுரக் கொலையாளிகள், தங்கள் சக்கரவர்த்தியின் ஆத்திரக் குரலையும், நெஞ்சுப் பொருமலையும் கூட நன்கு கவனித்திருக்க வேண்டும். எனவே,

'ஒட்டிக் கொல்ல
உணர்ந்து வெகுண்டான்;
விட்டிட் டான்அலன்!'
என்று விரைந்தார்.

இப்படி விரைந்தவர்கள் சிறுவனைப் பெரிய தொரு மலைப்பாறையுடன் கட்டினர்கள்.

கட்டிக் கல்லொடு
கால்விசை யிற்போய்
இட்டிட் டார்கட
லின்நடு வேதான்!

[கால் விசை – வாயு வேகம்.]

கொலைக் கருவி, தீ, விஷம், யானை இவற்ருல் எல்லாம் கொல்ல முடியாத சிறுவனைக் கல்லோடு கட்டிக் கடலில் மூழ்கச் செய்து பார்த்தார்கள், நிலத்திலே வைத்து வதைக்க முயன்று— தோல்வியுற்றவர்கள். கரை காணுத கடல் வெள்ளத்தைக் கண்ட பயத்திலேயே இறைவன் திருநாமத்தையும் மறந்து அமிழ்ந்து மரணமடைவான் என்று எதிர்பார்த்தார்களா!

ஆனல் கண் கண்ட பயத்திற் கெல்லாம் கை கண்ட மருந்தை மறக்க முடியுமா! 'நான் மறந்தாலும் நாக்கு மறப்ப

இல்லை!' என்பதல்லவா தொண்டர் நிலை?

கல்லா, சுரைக் குடுவையா?

பகவந் நாமத்தை உச்சரித்துக் கொண்டே கடலில் விழுகிறான் சிறுவன்: இப்போது நடக்கும் அற்புதத்தைப் பாருங்கள்:

நடுஒக் கும்தனி
  நாயகன் நாமம்

விடுகிற் கின்றில
  னுதலின், வேலை

மடுஒத்(து) அங்கதில்
  வங்கமும் அன்றாய்க்

குடுவைத் தன்மைய
  தாயது குன்றம்!

[நடு ஒக்கும் – நடுவு நிலைமையிலுள்ள. தனி நாயகன் – ஏக நாயகன். விடுகிற் கின்றிலனுதலின் – நழுவ விடாமலே இருந்துவிட்டானாதலால். வேலை-கடல். மடு ஒத்து – மடு ஒத்திருக்க. அங்கு அதின் – அங்கே அந்தக் கடலிலே. வங்கமும் அன்றாய் – மரக்கலம் ஒத்தது என்று சொல்லும் நிலையும் ஆகாதபடி. குடுவை – சுரைக்குடுவை.]

கல்லைக் கட்டிக் கடலில் போட்ட பிள்ளை முங்கிப் போவான் என்று நாம் எதிர்பார்க்கவில்லைதான். நம்பிக்கை அற்புதம் விளைக்கும் என்பதை அறிவோம். மகா விசுவாசம் — உண்மையான, மகத்தான நம்பிக்கை–கடுகளவாயிருந்தாலும், மலையைப் பார்த்து, ' நீ கடலில் போய் விழுந்து விடு ' என்று சொல்லி விட்டால் அப்படியே நடந்து விடும் என்கிறது கிறிஸ்தவ மதம்.

அந்த மலை அந்தக் கடலில் அமிழ்ந்து போகாமல் அப்படியே மிதக்கவும் செய்யும்! — என்கிறது இந்து மதம். அப்படி நற்றுணையாகிறதாம் பக்தி.

ஆனால் பிரகலாத பக்தியை இன்னும் சிறப்பிக்க விரும்புகிறது கவியுள்ளம். பிரகலாதனுக்கு அவனைச் சார்த்திக் கட்டிய குன்றம் மிதவையாயிற்று என்று சொல்லுகிற கவிஞன், அது மரக்கலம் போல் உதவியதுஎன்று கூடச் சொல்ல விரும்பவில்லை; சுரைக் குடுவை ஆயிற்று என்கிறான்.

தண்ணீரில் நீந்திப் பழகும் இளைஞன் (கிராம



வாகி) சுரைக் குடுவையை இடையில் கட்டிக்கொண்டு தண்ணீரில் விழுவதுண்டு. அப்படித்தான் ஆகிவிட்டதாம், பிரகலாதன் தன்னைச் சாத்திக் கட்டிய கற்பாறையுடன் கடலில் விழுந்து மிதப்பதும்.

கிராமத்துக் குளத்திலே சுரைக் குடுவை தானும் மிதந்து கொண்டு, தன்னை இடையில் சேர்த்துக் கட்டிக் கொண்டிருக்கிற பையனும் அமிழாத படி அவனை நீரின் மேல் மிதக்க வைத்துக் கொண்டிருக்குமே,—அதுதான் இப்போது கற்பாறையின் நிலையும்!

எனவே, பாறை சுரைக் குடுவை போன்றிருக்க, சமுத்திரம் சமுத்திர மாகவே யில்லை, அச்சமே அறியாத பக்திக் கண்ணுக்கு! நீந்தத் தெரியாதவனுக்குக் குளமும் கடல் தான்! பக்த பிரகலாதனுக்கோ, கடலும் மடுவாகிக் கல்லும் சுரைக் குடுவையாகிறது!

ஆலிலைமேல் ஒரு பாலகன் போல

'தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே!' என்று சொல்லத் தோன்றுகிறது. ஆனால் பக்தனோ, தன் பெருமை பேசுவதில்லை; நினைப்பது மில்லை; தன் பக்தியின் பெருமை யென்றும் கருதுவதில்லை, எல்லாம் பகவானுடைய பெருமைதான்; பகவந் நாமத்தின் மகிமைதான்!—எல்லாம் சரணு கதியின் சிறப்பே!

சரணுகதிக்கு அறிகுறியாகத் தலைமேல் கைகூப்பி யிருக்கிறான். ஆனால் இந்தக் குழந்தை-ஞானி இப்போது பகவானுக்குச் சமானனுய் விளங்குகிறுனும்:

தலையிற் கொண்ட
தடக்கையி னுன்தன்
நிலையின் நீர்வில்
மனத்தில் நினைந்தான்,
சிலையில் திண்புன
வில்சினை ஆலின்
இலையிற் பிள்ளை
எனப்பொலி கின்றுன்.

[தடக்கை – பெரிய கை; (இங்கே) சரணுகதி மகிமையால் பெரிதாக விளங்கும் கை. நிலையின் – தன் நிலையிலிருந்து. நீர்வில் – நீங்குதல் இல்லாத. சிலை – மலை: குன்று. திண் புனலில் – வலிய வெள்ளத்திலே, சினை ஆலின் – கிளைகளோடு கூடிய ஓர் ஆலமரத்தின்.]

இமயப் பிரதேசத்திலுள்ள மானச மடு ஒரு சமயம் கடலைப் போலவும், ஒரு சமயம் மடுவைப் போலவும் காட்சி யளிப்பதாகச் சொல்லுகிறுர்கள். அந்தப் பிரதேசத்தில் ஏற்படும் காட்சி-மயக்கங்களின் பயனுக அத்தகைய தோற்றங்கள் ஏற்படுகின்றனவாம்.

பக்திக் காட்சிகளிலோ மயக்கமில்லை. காட்சி வளத்திலும் தெளிவிலும் வேறு வேறு தோற்றங்களைக் கண்டு அனுபவிக்கலாம்.

பக்தி நிலையில் அபாயமே யில்லை: இடையூறே கிடையாது. கடலும் மடுவாகும்; மலையும் மிதக்கும் பக்தனுக்கு! எனினும் கடல் கடல் தான்: மடு மடுவே தான். பக்தன் இறைவனுக்குச் சமானனுகக் காட்சியளிக்கிறுன், ஒருவாறு பக்திக் கண்ணுல் பார்ப்பவருக்கு!

இந்த நிலையைத் தான் கவிஞன் காட்டுகிறுன்,

இலையிற் பிள்ளை
எனப்பொலி கின்றுன்

என்ற அருமந்த வாக்கிலே.

கடல் வெள்ளம் பிரளய வெள்ளத்தை நினைவூட்டுகிறது. பகைமை யுணர்ச்சிகள், அசுர கோபதாபங்கள், இரணிய ஆரவாரங்கள், எல்லாமே கடுங் காற்றிலே மோதி அடிக்கும் அலைகளாக வீசுகின்றன. எனினும் பிரகலாதன் மூழ்கிப் போகவில்லை.

ஆலிலை மேல் ஒரு பாலகன் போல் மலைப் பாறை மீது கிடந்தவாறே பகவானுடைய அழகான திருநாமங்களை ஓதிக் கொண்டிருக்கிறுனும், வேதங்களை ஓதாதுணர்ந்த பிரகலாதன்:

மோதுற்(று) ஆர்திரை
வேலையில் மூழ்கான்,
மீதுற்(று) ஆர்சிலை
மீது கிடந்தான்,
ஆதிப் பண்ணவன்
ஆயிர நாமம்
ஓதுற் றுன்,மறை
ஒல்லை உணர்ந்தான்.

[மோதுற்று – மோதிக் கொண்டு. ஆர் திரை – நிறைகிற அலைகள். வேலையில் – கடலில், மீதுற்று ஆர் சிலை – மேலே பொருந்தியுள்ள மலை. ஆதிப் பண்ணவன் – ஆதிதேவன். ஓதுற்றுன் – ஓதலானுன். மறை ஒல்லை உணர்ந்தான் – மறைகளை விரைவில் ஓதாது உள்ளுணர்வால் உணர்ந்து கொண்ட பிரகலாதன்.]

கம்பன் பாடிய



பிரகலாத சரித்திரம்

சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

13. கடல் வழி

கடவுள் என்று ஒரு பொருள் இருந்தாலும், அந்தப் பரம்பொருளுக்கு உருவம் எது! பெயர் எது! அதை முகஸ்துதி செய்து பயன் பெற இயலுமா!

நல்லறிவுள்ள ஒரு மனிதனைப் பார்த்து, 'உன் முகமே பூர்ண சந்திரோதயம்! கண்கள் நில மலர்கள் போல் இருக்கின்றன...' என்றெல்லாம் தோத்திரஞ் செய்தால், அவன் விரும்புவதில்லையே! அறிவின் மூலமாகிய — ஞானானந்த வெள்ளமாகிய — பரம்பொருள் தோத்திர வலைக்குள் சிக்கிக்கொள்வது எப்படி!

இப்படி யெல்லாம் ஆட்சேபிப்பவர் இன்றும் உண்டு; அன்றும் இல்லையென்று சொல்ல முடியாது. ஆஸ்திகம் போல் நாஸ்திகமும் தொன்மை மாட்சியுள்ளது தான். இந்த நிலையில், கடலில் மிதந்து கொண்டிருக்கும் பிரகலாதனுடைய தோத்திரம் நமக்கு ஏதாவது உதவி செய்யக் கூடுமா என்று பார்க்கலாம்.

உழக்கை இழந்தவன்

கடலைப் பற்றியோ, அபாயத்தைப் பற்றியோ, பிரகலாதனுக்கு நினைக்க மனமில்லை; — மனமே இல்லை தான். ஏனென்றால் இறைவனது நினைவிலேயே, தியானத்திலேயே, தன்னை முழுக்க முழுக்க இழந்துவிட்டது பிரகலாதனுள்ளம்.

ஒருவன் உழக்கைக் கொண்டு கடலை அளக்க முயன்றானாம். அலை ஒன்று புரண்டு வந்து உழக்கை அடித்துக் கொண்டு போய் விட்டது. எந்தக் கருவியால் அளக்கப் பார்த்தானோ, அந்தக் கருவியே பறிபோய் விட்டது. இது தான் நெஞ்சால் இறைவனை நினைப்பவர் நிலையும்.

நினைக்கும் உள்ளத்தைப் பறிகொடுத்து விடுகிறார்கள் அன்பர்கள். இறைவனுடைய தியானம் என்னும் கடலிலே இழந்து விடுகிறார்கள். இந்த நிலையில் இருந்த பிரகலாதனுக்கு அபாய நினைவு எப்படி இருக்க முடியும்! உழக்கிறகுள்ளே கிழக்கும் மேற்கும் பார்ப்பது போலத்தானே கவலைப்படுவதெல்லாம்!

பகவந்நாமத்தைத் தான் முதன் முதல் ஓதினான்! நாமமும் உள்ளமும் ஒன்றிவிருந்து ஒன்றைப் பிரிக்க முடியாதபடி ஒன்று பட்டன. அழகான ஆயிரம் திருநாமங்களை ஓதும் போதே வாய் தோத்திரம் செய்து வழிபடலாயிற்று. இந்தத் தோத்திரத்திலே கம்பனது சமயக் கொள்கையைக் காண முயல்வது தவறாகாது.

'அடியார்களுக்கு அடியவன் ஆவேன்' என்பதே தன்னுடைய ஆர்வம் என்கிறான் பிரகலாதன், எடுத்த எடுப்பிலே. அகங்காரத்தை அடியோடு இழந்த நிலையில் இந்த ஆர்வம் நிறைவு பெற்றிருக்கிறதாம்.

கடவுள் கொடியவன்!

'இப்படிப்பட்ட இந்த அடியவனது நிலைமைக்கு இணங்கி நீ அருள் செய்வாயோ!' என்ற துதியுடன் ஆரம்பமாகிறது பிரகலாத ஸ்தோத்திரம்:

'அடியார் அடியேன்'
எனும்ஆர் வம்அலால்,
ஒடியா வலியான்
உடையேன் உளெனோ?

கொடியாய்! குறியாய்!
குணம்ஏ தும்இலாய்!

நெடியாய்! அடியேன்
நிலைநேர் குதியோ?

[ஒடியா வலி — அழியாத வலிமை: (இங்கே) அகங்காரம். யான் உடையேன் உளனே — நான் உடையவனு யிருக்கி றேனே! கொடியாய் — கொடுமையுள்ள வனே. குறியாய் — வரையறுத்துக் குறிப் பிடமுடியாதவனே. நெடியாய் — விசுவ ரூப முடையவனே. நேர்குதியோ — இணங்கி அருள் செய்வாயோ?]

இந்தத் துதியிலே, 'கொடியாய்!' என்றுகூடக் கடவுளை அழைப்பது கவ னிக்கத் தக்கது. கடவுளுக்குக் குணமும் இல்லை, குறியும் இல்லை என்று குறிப்பிடு வதும் கூர்ந்து நோக்கத் தக்கது. துஷ்ட நிக்கிரகத்திலே கொடுமை வெளிப்படு கிறதாம்.

புரட்சிகரமாக வெளிப்படும் என்பது குறிப்பு. காலம் வந்து கூடும்வரை இறைவன் பொறுத்துப் பொறுத்துப் பார்க்கிறுன். திடீரென்று ஒரு கணத் தில் 'புதுமை'யாக விளங்குகிறுன் என்றும், ஆலகால விஷம் போலச் சீறுகிறுன் என்றும், அப்போது உலகமே நடுங்கிப் போகும் என்றும், 'வேரும் வேரடி மண்ணும்' இல்லாதபடி அதர்மம் அழிக்கப்படுமென்றும் புது மைக் கவி பாரதியார் கூறியுள்ள கருத் துக்கள் எல்லாம்,

கொடியாய்!

என்று பிரகலாதன் ஆண்டவனைக் குறிப் பதில் அடங்கி யிருக்கிறது எனலாம்.

குறியும் குணமும் இல்லை யென்ரு லும், எத்தனையோ குறிகளும் அடையா ளங்களும் கோவில்களும் விக்கிரகங்களும் இறைவனைக் குறிப்பிட்டுப் பக்தியைப் பரப்பவும் வளர்க்கவும் உதவுகின்றன.

குணம் ஏதும் இல்லாத நிலை என்ருல், நிர்க்குணம் ஒன்றும் இல்லாத நிலைமை தான் என்பர். அனந்தமான அழகிய மங்கள குணங்களின் கடல் அன்ரோ இறைவன்? அந்தக் கடலில் உள்ளத்தை மூழ்கிப்போக விட்டு, இந்த உவர்க் கட லிலே உடம்பைத்தான் மிதக்கவிட்டிருக் கிறுன் பிரகலாதன்!

கடவுள் வஞ்சகன்!

இறைவனைக் 'கொடியவன்' என்று குறிப்பிடுவதுபோல் 'வஞ்சகன்' என்றும் குறிப்பிடுகிறுன் பிரகலாதன்;



கள்ளம் திரிவார்
அவர்கை தவன் நீ!

[கள்ளம் திரிவார் — வஞ்சகமாய் நடப் பவர்களுக்கு. கைதவன் — வஞ்சகன்.]

கொடியவர்களுக்குக் கொடியவன்: வஞ்சகர்களுக்கு வஞ்சகன் கடவுள் என்பது பிரகலாத சித்தாந்தம். இப் படித் தீயோருக்கு ஆலகால விஷமாயிருப் பவன், பக்தர்களுக்கு அமுதமாக இருக் கிறான். தேவாமிர்தமும் ஆலகால விஷமும் ஒரே பாற்கடலில் தோன்றி யவை என்று தானே புராணம் சொல்லு கிறது!

இறைவனின் எலிப் பொறி

இத்தகைய கடவுளது உண்மை நிலையை யாரால் அறிய முடியும்? நான் முகக் கடவுளும் அறிந்து கொள்ள முடிய வில்லையாம்; ஐம்முகனுகிய சிவபெரு மானும் அறிந்து கொள்ள இயலவில்லை யாம்; தேவர் கோனுகிய இந்திரனும் தெரிந்து கொள்ள முடிய வில்லையாம்.


பகவானுடைய நாபிக் கமலத்திலிரு ந்து தோன்றியவன் படைப்புக் கடவுள்; எனினும் அறிந்து கொள்ள இயலாது திகைக்கிறான். அப்படியிருக்க, 'அறியா மையை உடைய அடியேன் உன்னை எப்படி அறிந்து தியானிக்க முடியும்?' என்று கேட்கிறான் பிரகலாதன்.

தலைமைத் தேவர்களும் அறிந்து கொள்ள இயலாத தேவாதிதேவனை, பேதைமைக் குணமுள்ளவன் எப்படித் தெரிந்து அணுக முடியும்? வெகு கால மாகத் தேடிக் கொண்டிருக்கிறார்களாம் தேவர்கள், அப்படித் தேடியும் காண வில்லை.

'நான் ஒரு நாளில் — அதாவது சொற்ப காலத்தில் - எப்படி எங்கே போய்த் தேடிக் கண்டு கொள்வேன்,— என் அறியாமை யாகிய கடலுக்குள்ளே சுற்றிச் சுற்றித் திரிந்து கொண்டிருப் பதைத் தவிர, வேறு என் செய்யவல் லேன்!' என்ற இந்த மன நிலையிலேயே அகங்காரம் அடியோடு போய் இறைவன் இலக்காகத் தக்க பணிவு நிலை புலப்படு கிறது எனலாம்.

பெருநாள் தெரிகின்
றிலர்;பே தைமையேன்

ஒருநாள் உனைஎங்
ஙனம்உள் ளுவெனே?



[தெரிகின்றிலர் — தெரிகின்றார்களில்லை. எங்ஙனம் — எப்படி. உள்ளு வெனோ — தியானிக்க முடியுமோ?]

இப்படி 'அறியாமை' (பேதைமை)யை அறிந்து கொள்வது தான் மெய்யறிவு என்கிறது பக்தி மதம். 'நான் அறியேன்' என்ற அறிவாவது அன்பர்களுக்கு இருக்கிறதாம். அறிவையே நம்பியிருப்பவர்களோ, 'நன்னெறியெல்லாம் தம்மறிவுதான்' என்று நம்பி மோசம் போகிறார்களாம். 'நான் அறியேன்' என்ற அறிவும் இல்லையே அறிவாளிகளுக்கு!

இறைவன் எத்தகைய அறிவுக்கும் எட்டாமல் அப்பால் நிற்பவன் அல்லவா?

ஆயப் பெறும்நன்
னெறிதம் அறிவென்(று)
ஏயப் பெறும்ஈ
சர்கள்எண் ணிலரால்;
நீஅப் புறம்நிற்
கநினைக் கிலர்,நின்
மாயப் பொறிபுக்
குமயங் குவரால்!

[ஆயப் பெறும் — ஆராய்ந்து பெறத்தக்க. தம் அறிவென்று-தமது அறிவே யென்று எண்ணி. ஏயப்பெறும் — பொருந்தப் பெற்ற. ஈசர்கள் — தலைவர்கள். எண்ணிலர் — எண்ணுக்கு அடங்காத தொகையினர் ஆவர். நினைக்கிலர் — நினைக்கத் திறமை யற்றவர்களாகி. மாயப் பொறி — மாயையாகிய எந்திரம். புக்கு — அகப்பட்டு.]

அறிவைக் கொண்டு அறிய முடியாத ஆண்டவனை மெய்யன்பினால், பணிவினால்தான் அணுக முடியும்! அவன் அருளால் தன்னைக் காட்ட நாம் கண்டு கொள்ளலாம். இது பக்தி மதம். எத்தகைய அறிவாளியும் ஈச்வரனுடைய மாயப் பொறியிலே, 'எலிப் பொறி'யில் எலி போல், அகப்பட்டுக் கொள்கிறான்.

அறிவை நம்பினால் அகங்காரத்தைத் தவிர்க்க முடியாது என்பது குறிப்பு. அறிவுச் சிறப்பினால் தாமே தனி நாயகர் என்ற உணர்வு ஏற்படுமாம். 'எல்லாம் அறிந்து விடும் என்று அறிவு சுட்டிக் காட்டிய போதிலும், தாமே பரம்பொருள் என்று கருதுவதற்கும் அறிவு இடம் தரக் கூடுமாம்.

'நானே ஸர்வஜ்ஞன்!' என்று எண்ணத் தோன்றுமாம். அறிவைத் தீட்டிக் கூர்மை செய்து கொள்ளும்போது, அதனால் 'நாமே பரம்பொருள்!' என்று சொல்லவும் தோன்றுமாம். இப்படிப் பொறியில் தள்ளும் அறிவுநெறியைக் காட்டிலும் பக்தி நெறியே சிறந்தது என்பது குறிப்பு.

வேதப் பொருளும் விளையாடுமா?

ஆதிப் பரம்பொருள் என்று ஒரு தெய்வத்தை ஒருவன் சொன்னால், அதை மறுத்து வேறொருவன் வேறு ஒரு தெய்வத்திற்குப் பரதத்துவம் கற்பிக்கவும் கூடும். இப்படி மதவாதங்களிலே கருத்து வேற்றுமைகளைக் காட்டுவதற்குப் பெரிய பெரிய சமய நூல்களும் ஆதாரமாகின்றன என்று பிரகலாதன் கூறுவதாகவும் வருகிறது. இது,

ஒன்றே பொருள்எனின்,
வேறென்ப; வேறெனின்,
அன்றென்ப ஆறு
சமயத்தார்

என்ற கருத்தை நினைவூட்டுகிறது.

இத்தகைய கருத்து வேற்றுமைகளையும் பகவானுடைய லீலையாகவே கருதுகிறான் பிரகலாதன்,

வேதப் பொருளே!
விளையா டுதியோ?

[விளையாடுதியோ-விளையாடுகிறாயோ.]

வேதப் பொருளின் திருவிளையாடல் அறிவை மயக்கி, அன்பிற்கும் பணிவிற்கும் ஒருவாறு விளங்கக்கூடும் என்பது குறிப்பு.

இந்த வேதப் பொருளாகிய பரம்பொருளிலிருந்து தான் உலகம் வெளிப்பட்டிருக்கிறது. எப்படி? பொன்னிலிருந்து பொன் நகைகள் செய்யப்படுகின்றன அல்லவா? அந்த விதமாக உலகம் வந்திருக்கிறது இறைவனிடமிருந்து என்கிறான் பிரகலாதன்.

பொன்னாலாகிய நகைகள் அந்தப் பொன்னிலிருந்து வேறுபட்டிருக்கவில்லை. எனினும் பொன்னும் நகையும் ஒன்று அல்ல. பொன்னின் பரிணாமம் தான் நகை. இது தான் உலகத்திற்கும் இறைவனுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளுமாகும், என்பது பிரகலாதன் கருத்து.

இதைக் கம்பனுடைய வேதாந்தக் கொள்கையாகவும் கருதலாம்:

நின்னிற் பிறிதாய்
நிலையின் திரியாத்

தன்னிற் பிறிதா
யினதா மெனினும்,

உன்னிற் பிறிதா
யினவோ உலகம்?

பொன்னிற் பிறிதா
கிலபொற் கலனே.

[நின்னிற் பிறிதாய் — உன்னிடத்திலிருந்து வெளிப்பட்டு. நிலையின் திரியா — நிலைமை மாறி. தன்னிற் பிறிதாயினதா மெனினும் — தமக்குள்ளே பல் வேறு வகைப் பட்டன வானாலும். உன்னிற் பிறிதாயினவோ — உன்னிலிருந்து வேறு பட்டனவாகுமோ. பொன்னிற் பிறிதாகில — பொன்னிலிருந்து வேறு பட்டன இல்லையே. பொற்கலன் — பொன் நகைகள்.]

இந்தத் தோத்திரம் பின் வருமாறு முற்றுப் பெறுகிறது:

'தாய்தந் தையெனும்
தகைவந் தனைதான்,

நீதந் தனை; நீ
உறு நெஞ் சினன்நான்,

நோய்தந் தவனே
நுவல்தீர் வும்!' என,

வாய்தந் தனசொல்
லிவணங் கினனால்.

[தகை – தகுதி. வந்தனை – வந்து. தந்தனை – தந்தாய். உறு–பொருந்தியிருக்கும். நோய் – துன்பம். நுவல் தீர்வும் – சொல்லப்படும் பரிகாரமும். என – என்று இப்படியெல்லாம். வாய் தந்தன சொல்லி – பலவாறு சொல்லி.]

உலகத்தைப் படைத்தவன், நம்மைப் படைத்தவன், நமக்குள்ளேதான் இருக்கிறான். இதை உணர்ந்து கொண்டு, 'நோய் தந்தவனே மருந்துமாவான்!' என்று சரணாகதி செய்ய வேண்டும். இதுவே துன்பத்தை வெல்லும் முறை.

வாழும் முறையும் இதுதான். வாழ்க்கை வெற்றிகுடும் முறையும் இது தான். பிரகலாதனது இக் கொள்கை தான் கம்பன் கொள்கையும் எனலாம்.

* * *

கொலம்பஸ் முதலானவர்களின் கடல் வழி புதிய பிரதேசங்களைக் கண்டு பிடித்தது. பிரகலாதன் கடலில் கண்ட வழியோ ஒரு புதிய ஞானப் பெருங் கண்டத்தைக் கண்டு பிடித்திருக்கிறது.

கம்பன் பாடிய பிரகலாத சரித்திரம்

சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

14. கொல்லும் நோய்க்கு மருந்து

இரணியனுக்குப் பகை என்பதே இல்லை. அத்தகைய வெற்றி பெற்று விட்டான் உலக மெங்கும். 'எனக்கு இனிமேல் ஒரே பகைவன் தான்' என்று எண்ணி யிருந்தான்.

இந்த ஒரே பகைவனை முடிப்பது இயலுமோ! ஒடுக்கவாவது இயலாதா! பக்தர்களை யெல்லாம் ஒழித்து விட்டால் பகவானை ஒடுக்கி விட்டதாக ஏற்படாதா!

இரணிய மகா ராஜ்யத்திலே இரணிய பக்தர்களைத் தவிர, வேறு பக்தர்களெல்லாம்—விஷ்ணு பக்தர்கள், சிவ பக்தர்கள், வேறு தெய்வங்களின் பக்தர்கள் எல்லாரும்—அழிக்கப்பட்டனர். எனவே, 'நமக்கும் உண்டோ பகை!' என்று இறுமாந்து கொலு வீற்றிருக்கிறது இரணிய ஆணவம்.

நஞ்சான நெஞ்சும் அமுதான நெஞ்சும்

இந்த நிலையில்தான் எதிர்பாராத படி ஒரு பகை மூளைத்து விட்டது. குமுறுகிறான்; நெஞ்சு பொருமுகிறான்.

பிரகலாத பக்தியைக் கண்டதும், கொடுங் கோபத்துடன், 'வேறே ஒரு பகையும் வேண்டுமோ! என் பகை என் உடம்புக்குள்ளேயே முளைத்துப் பிள்ளையாக வளர்ந்திருக்கிறது; என்ன அதிசயம், என்ன அநியாயம்!' என்று கொதிக்கிறது உள்ளம்.

'கண்ணுக்குக் காணாத என் பகைவனுக்கு அன்புடையவன் என்கிறானே, அடியவன் என்கிறானே. இவனைக் கொன்று தீர்த்து விடுங்கள்' என்று கர்ஜிக்கிறான். கொலை முயற்சிகளுக்கும் குறைவில்லை.

பிரகலாதனைக் கொல்லவே முடியவில்லை. அசுரக் கொலைஞர்கள் தோல்வியை ஒப்புக் கொள்கிறார்கள். இரணியனே, 'நானே கொல்வேன்; தந்தையின் கையே மைந்தனைக் கொலை செய்யப் போகிறது!' என்று இதயம் அலற எழுந்து வருகிறான், ஆலகால விஷம் போல.

இதற்கு முன்பே நஞ்சைக் கொடுத்துக் கொலை செய்ய முயன்று அந்த முயற்சியும் பழுதாகிவிட்டது. ஸாக்ரடிஸ் ஞானியைப் போல் பிரகலாதன் விஷத்தை வாங்கியுண்டான். ஆனால், கிரேக்க ஞானி இறந்தார் — சரித்திர புருஷர் ஆனதால். பிரகலாதனே சிறிதும் மயக்கமில்லாமல், ஒரு சோர்வும் இல்லாது காணப்பட்டான்.

விஷம் கொல்லவில்லை என்று தெரிந்ததும், குதிரைச் சம்மட்டிகளால் அடித்துக் கொல்லும்படி உத்தரவு செய்தான் இரணியன். அப்படியும் அடித்துக் கொல்ல முடியவில்லையே என்றனர் அசுரர்கள்.

அப்போது பிரகலாதனுள்ளத்தை எம்பெருமானது விசுவரூப தியானம் வியாபித்திருந்ததாம். 'ஈச்வரனுக்கு ஆயிரம் முடிகள், ஆயிரம் கண்கள், ஆயிரம் கால்கள், ஆயிரம் கைகள்...' என்றெல்லாம் அனந்தமான வேதங்கள் முழங்குகின்றன அல்லவா! 'ஆயிரம் என்றால் அந்த அளவல்ல; அளவிறந்த கைகள் முதலியன' என்று எண்ண மிட்டானும் பிரகலாதன்.

அனைத் தலகங்களின் வடிவமாக எம்பெருமானது சொருபத்தை — விராட் சொருபத்தை — தியானித்துக் கொண்டிருந்தது பிரகலாதனுள்ளம். மனங் கலங்காமல் இந்தத் தியானத்தில் இருக்கும் பிரகலாதனைச் சம்மட்டி அடிகள் கலக்கி விடவில்லை.

'வானேழும் நடுங்கிட...'

கடைசியாகத்தான் இரணியன், 'நானே பிரகலாதன் உயிரை உண்டுவிடுகிறேன்!' என்று கர்ஜித்துக் கொண்டே வருகிறான்.

'ஊனோ(டு) உயிர்வே
  றுபடா உபயம்
தானே உடையன்
  தனிமா யையினால்;
யானே உயிர்உண்
  பன்!' எனக் கனகன்
வானே ழும்நடுங்
  கிடவந் தனனால்.

[உபயம் – உபாயம். தனி மாயையினால் – தனக்கே உரிய ஒருவகை மாயையினால். உயிர் உண்பன் – உயிரை உண்டு விடுவேன். கனகன் – இரணியன்.]

இரணியனுடைய மிடுக்கு நடையையும் துடுக்குப் பேச்சையும் துப்பாட்டின் சப்த ஜாலங்கள் அப்படியே நம் முன் கொண்டு வந்து விடுகின்றன. வாசித்து வாசித்து இரணியனைக் கண்டு பிடித்துக் கொள்ள வேண்டியதுதான்!

விண்ணும் மண்ணும் நடுங்கிய போதிலும் பிரகலாதனுக்குக் கொஞ்சமும் பயமில்லை. அபாரமான தன்னம்பிக்கையும் அச்சமின்மையும் எவ்வளவு பணிவுடன் வெளிப்படுகின்றன!

நடுக்கத்திற்கு மருந்து

'எவன் உயிரைக் கொடுத்தானோ, அவனுக்குத் தான் அதை எடுக்கவும் அதிகாரம் உண்டு. அந்த அதிகாரம் வேறு எந்தச் சர்வாதிகாரிக்கும் சக்கரவர்த்திக்கும் உரியதன்று' என்று பேசும் பிரகலாதன் எவ்வளவு விநயமாக, எவ்வளவு உசிதமாகப் பேசுகிறான் பாருங்கள்:

வந்தா னைவணங்
  கி, 'என்மன் னுயிர்தான்
எந்தாய்! கொளஎண்
  ணினையேல், இதுதான்
உந்தா ரியதன்(று);
  உல(கு)யா வும்உடன்
தந்தார் கொளநின்
  றதுதான்' எனலும்—

[மன் உயிர் – நிலைபெற்ற உயிர். எண்ணினையேல் – நினைத்திரானால், இதுதான் – இவ்வுயிர் தான். உம் தாரியதன்று – உமது வசத்தில் உள்ளதன்று.]

அது கேட்ட இரணியனுக்குக் கோபம் மூண்டெழுந்ததென்று சொல்லவா வேண்டும்? இவ்வளவு கோபத்திலும் பிரகலாதனைக் கொல்லத் தொடங்கவில்லை என்பது தானே இப்போது அதிசயம்!

பிரகலாதனிடம் ஒரு 'தனிமாயை' ஆகிய சக்தி எப்படியோ வந்து அமைந்திருக்கிறதென்றும், அதனால் தான் அவனை மற்ற அசுரர்களால கொல்ல முடியவில்லை யென்றும் இரணியன் கருதினானல்லவா? அந்தக் கருத்துடன் தாமன அடிமைகளான கொலைஞர்கள் செய்ய வேண்டிய தொழிலைத் தானே செய்ய வந்திருக்கிறான்?

இத்தகைய இரணியன், உலகு தந்தவரைக் குறித்துப் பிரகலாதன் பிரஸ்தாபித்ததும், அத்தகைய சிலர் — யாரோ ஐந்தாம் படை ஆசாமிகள் — இந்தச் சிறுவனுக்கு அந்தத் 'தனி மாயை' கற்பித்திருக்கலாமோ என்று எண்ணமிடுகிறான்.

ஒருவேளை இந்தப்பையன் அந்த இரகசியத்தை வெளியிட்டு அந்த ஆசாமிகளைக் காண்பிப்பானானால் கண்டு கொள்ளலாமே என்றும எண்ணுகிறானும்.

காட்டுமேல் காட்சி
  கொளவான்

[காட்டுமேல் – காட்டுவானானால். காட்சி கொள்வான் – அந்தக் காட்சியையும் கண்டு கொள்ளலாமே என்று எண்ணியவன்.]

என்பது இப்போது இரணியனது மனநிலை.

உலகு தந்தார் என்று பிரகலாதன் மரியாதைப் பன்மையாகத் தன் பெரும் பக்தி தோன்றச் சொன்னானல்லவா! அதற்கு இரணியன் ஒரு விபரீத வியாக்கியானம் செய்து கொள்கிறான். உலகம் தந்ததாகச் சிலரையோ, பலரையோ பிள்ளை குறிப்பிடுவதாகக் கருதி அந்தச் சதிகாரக் கும்பலைக் கண்டு பிடித்து நாசஞ் செய்து விடலாம் என்று மனப்



பால் குடிக்கிறான். அதற்காகத்தான் பிரகலாதனைப் டனிச்சென்று கொல்லத் தொடங்கவில்லை.

'பையா! உலகம் தந்தவர்கள் யாரப்பா!' என்று சமாதானமாய்க் கேட்பது போலக் கேட்கிறான். 'மூவர்' என்று சொல்கிறாயா? 'என் பெயர் ஏத்து வாழும்' மூவரா? அல்லது என் திருநாமத்தைத் துதித்து வாழ்கின்ற முனிவர்களா!

'மார்பிலே தாழ்வடம், நெஞ்சிலே கரவடம்' என்று சொல்வதுண்டல்லவா! அந்த மாதிரி முனிவரும் தேவரும் மூவரும் இரணிய நாமத்தைச் சொல்லி ஜபமணிகளை உருட்டிக் கொண்டே நெஞ்சிலே புரட்டும் புரட்சியுமாய் இருக்கிறார்களோ என்று சங்கிக்கிறது இரணியனுள்ளம்.

'இந்த நாசகாரக் கும்பலை நசுக்கி விட வேண்டும். இக்கும்பலே நம் பையனை நமக்கு எதிராய்க் கிளப்பி விட்டிருக்கக் கூடும்' என்று துடிக்கிறது இரணியனுள்ளம்.

இத்தகைய உள்ளத்திலிருந்து புறப்படும் சொற்கள் எவ்வளவு பொருத்தமாக வருகின்றன பாருங்கள்:

'ஏவரே உலகம்
தந்தார்? என்பெயர்
ஏத்தி வாழும்

மூவரே? அல்ல
ராகின் முனிவரே?
முழுதும் தோற்ற

தேவரே? பிறரே?
யாரே? செப்புதி
தெரிய' என்றான்,

கோவம்மூண் டெழுந்தும்
கொல்லான், காட்டுமேல்
காட்சி கொள்வான்.

[ஏவரே – எவர்தான். மூவரே – மும்மூர்த்திகளா. முனிவரே – முனிவர்களா. செப்புதி தெரிய – சொல்லு எனக்குத் தெரியும்படி. கோவம் – கோபம்.]

'செப்புதி தெரிய' என்றல்லவா கேட்கிறான் இரணியன்! பிரகலாதனது தத்துவப் பிரசங்கம் ஒன்றும் இரணியனுக்குப் புரியவில்லை யென்பது குறிப்பு. எட்டும் இரண்டும் பத்து என்று எண்ணிக் காட்டுவது போல் சொல்லிக் காட்டு என்று வற்புறுத்துகிறான்.

தத்துவம் தெரியுமா கனகனுக்கு! இன்றைய கனகர்களுக்கும் 'ரூபாய் அணா பைசா' தவிர வேதாந்த நுணுக்கம் போன்ற குட்சுமப் பொருள் ஒன்றும் விளங்குவதில்லையே!

பிரகலாதனுக்கோ கனகனது காரியப் பேச்சும் விளங்கவில்லை; 'ஐந்தாம் படை'யைத் தெரிந்து கொள்வதற்காகத் தூண்டித் துளைக்கும் சூதுப் பேச்சும் விளங்கவில்லை. எல்லா நடுக்கங்களுக்கும் தான் மருந்தாகக் கண்டு கொண்டிருந்த கடவுளுண்மையைத்தான் வெளியிடுகிறான் இரணியனது வினவுக்கு விடையாக:

உலகுதந் தானும்,
பல்வே(று) உயிர்கள்
தந்தானும், உள்ளுற்(று)

உலைவிலா உயிர்கள்
தோறும் அங்கங்கே
உறைகின் றானும்,

மலரினில் மணமும்
எள்ளில் எண்ணெயும்
போல எங்கும்

அலகில்பல் பொருளும்
பற்றி முற்றிய
அரிகாண், அத்தா!

[உள்ளுற்று – உள்ளே பொருந்தி; அந்தர்யாமியாகி. உலைவிலா – எல்லையில்லாத. அலகில் – அளவில்லாத. பல் பொருளும் பற்றி – பல பொருள்களையும் பற்றிக் கொண்டு. முற்றிய – நிறைந்திருக்கிற. அரி காண்–ஹரி யென்ற மகா விஷ்ணு. அத்தா – தந்தையே.]

அவனே சரணம்

இந்தப் பாட்டு, கம்ப ராமாயணக் காப்புச் செய்யுளை நினைவூட்டுகிறது:

உலகம் யாவையும்
தாம்உள ஆக்கலும்,

நிலைபெ றுத்தலும்,
நீக்கலும், நீங்கலா

அலகி லாவிளை—
யாட்டுடை யார்அவர்

தலைவர் அன்னவர்க்
கேசர ணாங்களே.

[நிலை பொறுத்தலும் – நிலையாகப் பொறுத்தலும்: உள்ளுற்று அங்கங்கே உறைந்து எல்லாவற்றையும் தாங்கி நிற்றலும். நீங்கலா – காலத்தால் நீங்காத. அலகிலா – ஆகாய வெளியினுல் அளந்து வரையறுக்கப் படாத. அன்னவர்க்கே – அவருக்கே. சரண்ஆங்களே – சரண்ஆகுங்கள்; அவரையே சரணமாக அடையுங்கள்.]

'உலகு தந்தானும்' என்ற பாட்டும் 'உலகு' என்று தொடங்குகிறது. 'அலகில்' என்று இப் பாட்டில் வருவதை 'அலகிலா' என்று காப்புச் செய்யுளில் வருவதுடன் ஒப்பிடலாம்.

ஸர்வாந்தர்யாமியாகிய ஸர்வேச்வரனை — உள்ளும் புறமுமாக எங்கும் வியாபித்திருப்பவனை, —'எங்கே இருக்கிறான்?' என்று கேட்பதில் பொருளில்லை – பொருளே இல்லை. இந்தக் கடவுள் நிலையை உணர்ந்து சரணாகதி செய்வதே இந்தப் புதிருக்கும் திறவுகோல் – எந்தப் புதிருக்கும் திறவுகோல்.

இதுவே சாதக்களுக் செல்லாம் நடுக்கத்தைப் போக்கும் மருந்து — நல்ல வேதாந்த சித்தாந்த மருந்து.

இது கம்பன் மதம். இதுவே பிரகலாதன் வாயிலாக வெளிப்படுகிறது.

ஆனுல் இந்த மருந்தை இரணியன் ஏற்றுக் கொள்வது எப்படி! அதற்கு இரணிய மதம் இடம் கொடுக்குமா! இரணியனது மத நோய், மன நோய் முற்றிப் போய்விட்டதல்லவா!

கொல்லும் நோய்க்கு மருந்து கொடுத்தால், நோயின் வெம்மையுடன் மருந்தின் வெம்மையும் சேர்ந்துகொண்டு நோயாளியைத் தீர்த்து விடும் என்று கூறுவதுண்டல்லவா!

கம்பன் பாடிய சித்திர ராமாயணம் — பிரகலாத சரித்திரம்

பி. ஸ்ரீ.

15 'கள்வ ! கள்வனைக் காட்டு ?'

'மலர்கள் நன்றாக மலர்ந்திருக்கின்றன. 'மலர்ந்திருப்பது மலர்களின் இயல்புதானே' என்கிறான் ஒருவன். 'மணம் கூட இல்லை இம்மலருக்கு' என்கிறான் மணத்தை உணர்ந்து கொள்ளும் சக்தியில்லாதவன்.

கடவுளை எங்கே காணலாம் ?

'குடங் குடமாக எண்ணெய் வைத்திருப்பதைப் பார்க்கிறான் ஒருவன். 'நல்லெண்ணெயும் தண்ணீரைப் போல் தானாகவே ஊறி வந்திருக்கும்!' என்றே துணிகிறானும். 'எள்ளிலிருந்துதான் எண்ணெய் வந்திருக்கிறது' என்று சொன்னாலும் நம்பத் தெரியவில்லையாம்.

உலகத்திற்கும் கடவுளுக்கும் உள்ள உறவும், மலருக்கும் மணத்திற்கும், எள்ளுக்கும் எண்ணெய்க்கும் உள்ள உறவு போன்றது என்கிறான் பிரகலாதன். சிருஷ்டி தானாக மலர்ந்ததில்லை; சிருஷ்டிக்குக் காரணமான சக்தி சிருஷ்டியின் அகத்தே மணம் போலிருக்கிறதாம். எள்ளினிடத்தே எண்ணெய் போலிருக்கிறதாம் கடவுள் நிலை.

தஞ்சை மிராசுதார் ஒருவர் சென்னை மாநகரில் இருந்து கொண்டே தம் விவசாயத் தொழிலை நடத்திவரக்கூடும். இறைவனுடைய தொழில் அப்படி நடைபெறுவதில்லையாம். மேக மண்டலத்திற்கு அப்பால் எங்கேயோ ஒரு பரமண்டலத்தில் தான் இறைவன் உறைகின்றான் என்பதில்லை. 'உயிர்கள் தோறும் அங்கங்கே உறைகின்றான்' என்கிறான் பிரகலாதன்.

இக்கருத்தினையே மேலை நாட்டுப் புலவர் ஒருவர், 'கை கால்களைக் காட்டிலும் நம்முடன் நெருங்கிய தொடர்புள்ளவன் கடவுள் : மூச்சுக் காற்றைக் காட்டிலும் நெருங்கி உதவுகிறவன்' என்பதாக வெளியிடுகிறார். இதைப் பக்தர்களின் 'ராஜ சாஸனம்' என்று கூறலாம்.

ஆனால், பக்தரல்லாதாருக்கு இது விளங்குவது அரிது. 'என் கண்ணால் நோக்கிக் காண்பதைத் தான் நான் நம்ப முடியும்' என்று சொல்வோருக்கு எப்படித்தான் கடவுளைக் காட்ட முடியும்!

பிரகலாதன் சொல்லுகிறான் :

'என்கணால் நோக்கிக்
காண்டற்(கு) எங்கணும்
உளன்காண் ; எந்தை!

உன்கணால் அன்பிற்
சொன்ன உறுதியென்(று)
ஒன்றும் கொள்ளாய் ;

நின்கணால் நோக்கிக்
காண்டற்(கு) எளியனோ ?

[என் கணால்–என்னுடைய கண்களால். எந்தை–என் தந்தையே. உன்கணால் – உன்னிடத்தில், நின் கணாய் – உன்னுடைய கண்களால்.]

ஸர்வாந்தர்யாமியான ஸர்வேச்வரனைக் குறித்து, 'எங்கே இருக்கிறான் !, என்று கேட்டால், 'எங்கும் இருக்கிறான் ?' என்றுதான் பக்தர்கள் சொல்லக் கூடும். பிரகலாதனோ, 'என் கணால் நோக்கிக் காண்டற்கு எங்கணும் உளன்' என்று, உலகு தந்தவனை உலகப்பொருள்களில் எல்லாம் கண்டு காட்டுகிறான்.

எவ்வளவு தெளிவாய்க் காட்டினாலும் காண்பவனுக்குக் கண் வேண்டுமல்லவா? இரணியனுக்கோ ஞானக்கண் முற்றும்

குருடு; கண்ணுள்ளவர் கண்டு காட்டுவதையும் நம்புவதில்லை இந்தக் குருடன் !

இது கேட்ட இரணியன், 'இப்படிப் பிடி கொடாமல் பேசிக் கொண்டேயிருக்கிறானே இந்தப் பையன்!' என்று சற்று ஆலோசித்துப் பார்க்கிறான். பிரகலாதனோ தான் ஞானக் கண்ணால் காண்பதை மேலும் கொஞ்சம் தத்துவமாக விவரித்துப் பேச்சை முடிக்கிறான்.

'மூன்றவன் குணங்கள் ;
செய்கை மூன்(று); அவன்
உருவம் மூன்று;

மூன்றுகண் சுடர்கள்,
செந்தீ மூன்(று) அவன்
உலகம் மூன்று ;

தோன்றலும் இடையும்
ஈறும் தொடங்கிய
பொருள்கட் கெல்லாம்


சான்றவன் அவனே ;
வேத முடிவிது
சரதம்' என்றான்.

[மூன்று அவன் குணங்கள் – ஸாத்விகம், ராஜஸம், தாமஸம் என்னும் முக்குணங்களும் இறைவனுடைய குணங்கள். செய்கை மூன்று — படைத்தல் காத்தல் நீக்குதல் என்னும் முத்தொழில்களும் ஆண்டவனுடைய செய்கை. உருவம் மூன்று—பிரமன், விஷ்ணு, சிவன் என்னும் மும்மூர்த்தி சொருபமும் அவன் உருவம். மூன்று கண் சுடர்கள் செந்தி – சூரிய சந்திரர் என்னும் இரு சுடர்களும் செந்தீயும் அவனுடைய கண்களாம். அவன் உலகம் மூன்று—சொர்க்கம் மத்தியம் பாதாளம் என்னும் மூன்று உலகங்களும் அவன் உலகம். தோன்றலும் இடையும் ஈறும்—முதல் நடு முடிவு ஆகிய மூன்று நிலைமையும். தொடங்கிய பொருள்கட் கெல்லாம் — உண்டான பொருள்களுக் கெல்லாம். சான்றவன் அவனே — சாட்சியாவான் அவனே. சரதம்—சத்தியம்.]

ஸர்வ வியாபியான கடவுளின் தன்மையைப் பிரகலாதன் இப்படிக் கூறி முடித்தான். இரணியனும் வேதம் தெரிந்தவன்தான்: வேதத்தில் இத்தன்மை கடவுளுக்குக் கூறப்பட்டிருக்கிறது என்பதையும் அறிந்தவன்தான்.

ஸாத்விகம், ராஜஸம், தாமஸம் என்னும் முக்குணங்களில், ராஜஸம் என்ற ஒரே குணம்தான் இரணியன் குணம். ஸாத்விகத்தில் நம்பிக்கையே இல்லை. கடவுளுடைய முத்தொழில்களிலோ எல்லாம் தனக்கு உரியன என்றே நம்புகிறவன்.





இறைவனுடைய மூன்று உருவங்களான மும்மூர்த்திகளும் தனக்கு அடிமை; சூரிய சந்திரர் அக்கினி என்ற முச்சுடர்களும் அடிமைக்கும் அடிமை தானே! மூன்று லோகங்களும் அடிமையும் உடைமையும்தான்!

முதலும் நடுவும் முடிவும் உள்ள பொருள்களுக்கெல்லாம் சாட்சி கடவுள் என்றால், ஆட்சி இரணியன் வசத்தில் தானே இருக்கிறது? எனவே கடவுள்-தன்மை தன்னிடத்திலிருப்பதாகவே இரணியன் நம்பியிருக்கிறான்.

சிறுவனுக்கும் சிறுவன்தான் இரணியன்!

உலகு தந்தவன் வேறு, உலகை ஹிம்ஸித்து அடக்கி ஆளுகிறவன் வேறு என்றான் பிரகலாதன். உலகு தந்தவன் கடிகாரம் செய்தவனைப் போல், அல்லது வேறொரு யந்திரம் செய்தவனைப் போல் வெளியே தான் இருக்கிறான் என்பதில்லை. உலகத்திற்கு உள்ளும் புறமுமாய், எங்கும் தானாய் இருக்கிற ஸர்வ வியாபியே உலகு தந்தவன்.

இப்படி இரண்டு உண்மைகளைச் சொல்லிவிட்டுப் பிரகலாதன் முடிவுரையாக இறைவனது தன்மையையும் சொல்லி வைத்தான். இடையே எப்படிக் கடவுளை நோக்கினால் காண முடியும் என்பதையும் சொல்லி வைத்தான். இது ஒன்று தானே இரணியன் கவலை இப்போது!

'உலகு படைத்தவர் யார்?' என்று ஒரு சிறுவனைக் கல்வி அதிகாரி கேட்டார். 'நீங்கள் தான் ஸார்!' என்று பையன் சொல்லி விட்டான், அதிகாரியின் தலைப்பாகையையும் ஆடம்பரமான அங்கவஸ்திரம் முதலான சின்னங்களையும் பார்த்துவிட்டு.

'அடே சரியாகச் சொல்லு' என்று மிரட்டினார் உபாத்தியாயர். 'வாத்தியார் ஸார்தான் உலகம் படைத்தவர்!' என்றான் சிறுவன்.

கல்வியதிகாரிக்குத் திகைப்பு அதிகரித்தது. கல்லூரி ஆசிரியருக்குக் கோபம் அதிகரித்தது. பையனுக்குப் பயம் அதிகரித்தது. 'நான் தான் படைத்தேன் உலகத்தை!' என்பதாக ஒப்புக்கொண்டு விட்டான். 'அந்தக் குற்றவாளி அடியேன் தான்!' என்றான்.

இரணியன் கதையோ வேறு விதமாய்ப் போகிறது. தானே உலகம் தந்ததாக எண்ணுகிறான்; சொல்லுகிறான்.

உலகத்தைத் தன்னால் நாசஞ் செய்து விட முடியாதல்லவா! வேறொருவரையும் உலகம் தந்தவராக இரணியனால் ஒப்புக் கொள்ளவும் முடியாதே!

அந்தச் சிறுவன் கதையில், மிரட்டப் பட்டவன் சிறுவன். இரணியனோ, 'சிறுவன் என்னை மிரட்டுகிறான்!' என்று எண்ணுகிறான்.

கல்வி அதிகாரியோ, கல்விச்சாலை ஆசிரியரோ உலகத்தை எப்படிப் படைத்திருக்க முடியாதோ, அப்படி மும்மூர்த்திகளில் ஒருவரும் உலகம் தந்திருக்க முடியாது என்பது இரணிய சித்தாந்தம்.

'அந்தக் கதையிலே சிறுவன் தானே ஒப்புக் கொண்டபோதிலும் எப்படிக் கடவுளாக வில்லையோ, அப்படித் தானே இந்த இரணிய சர்வாதிகாரியும் கடவுளாக முடியாது என்பது பிரகலாத சித்தாந்தம். இரணியன் வலிமையிலும் வீரத்திலும் கொடுமையிலும் ஆட்சித் திறனிலும் எவ்வளவோ பெரியவனாக இருந்த போதிலும், இறைவனுடைய சன்னிதியில் சிறுவனுக்கும் சிறுவன் தானே!

'ஏதாவது ஓரிடத்தில் காட்டு!'

பிரகலாதன் கடவுளின் தன்மையைக் கூறி முடித்ததும், 'அதெல்லாம் இருக்கட்டும், பையா! உன்னுடைய சர்வ வியாபியை எங்கேயாவது ஓரிடத்தில் காட்டிவிடு, பார்க்கலாம்; "இவன்தான் அவன்!" என்று சுட்டிக்காட்டி விடு' என்கிறான்.

என்றலும், அவுணர்
வேந்தன் எயிற்றிணை
இலங்க நக்கான்,
'ஒன்றவ பொருள்கள்
எல்லாம் ஒருவன்புக்(கு)
உறைவன் என்றாய்;
நன்(று)அது காண்டும்;
பின்னர் நல்லவா
புரிதும், தூணில்
நின்றுளன் என்னில்
கள்வ! நிரப்புதி
நிலைமை' என்றான்.

[என்றலும் — என்று பிரகலாதன் சொன்னதும். அவுணர் வேந்தன் — அசுர சக்ரவர்த்தியான இரணியன். எயிற்று இணை – பல் வரிசைகள். நக்கான் – சிரித்தவனாகி. புக்கு உறைவன்- புகுந்து வசிக்கிறான். நன்று அது காண்டும் – அதை நன்றாகக் கண்டு பிடித்து விடுவோம். பின்னர் நல்லவா புரிதும் – பிறகு நல்லவாறு செய்வோம். கள்வ – திருட்டுப் பயலே. நிரப்புதி நிலைமை– அந்தக் கடவுள் நிலைமையை இந்த ஓரிடத்திலாவது நிரம்பச் செய்து காட்டுவாய்.]

இரணியனுக்கு ஒரே சிரிப்பு வந்து விட்டதாம், 'கடவுளுக்கு ஒரு விலாசமில்லை; அவன் ஓரிடத்தில் இருப்பவனில்லை' என்று பிரகலாதன் சொன்னதும். எந்தச் சர்வாதிகாரியானாலும் இருப்பிடம் ஒரே இடம்தானே.

மேலும் ஒருவன் ஓர் ஆசனத்தில் வீற்றிருக்கலாம். ஓர் அரசன் சிங்காசனத்தின் மீது கொலுவிருக்கலாம். ஆனால் இந்தப் பிரகலாதனுடைய கடவுளோ இப்படிக் கௌரவமாய் இருப்பதாகத் தெரியவில்லை. குற்றவாளி போல் தலை மறைவாய்ப் பதுங்கிக் கொண்டுதானே இருக்கிறான்! பொருள்களுக்குள்ளே புகுந்து மறைந்து உறைகின்றான் என்று தானே பிரகலாதன் சொல்லுகிறான்.

நல்லது; அந்த ஒளிப்பிடத்திலே அவனைத் தேடிக் கண்டு பிடிப்போம். பிறகு அந்தத் திருடனுக்கு ஒரு நல்ல பாடம் கற்பிப்போம் என்றெல்லாம் ஓடுகிறது இரணியனுள்ளம். ஆனால் எத்தனை ஒளிப்பிடங்களில் இந்தச் சர்வாதிகாரி தான் தேடிப் பார்க்க முடியும்!

இரணியனுக்கோ அவசரம், ஆத்திரம் மட்டுமா! அவசரம் கலந்த அவநம்பிக்கை என்னும் மும்மூர்த்திகளும் இந்த அசுர உள்ளத்தை ஆவேசித்து, ஆட்கொள்ளத் தொடங்கி விட்டனர், பிரமன் விஷ்ணு சிவன் என்னும் மும்மூர்த்திகளை இவன் மகுட பங்கம் செய்த பின்பு.

'மூவர்க்கு முதல்வனான கடவுள் இருக்கிறான்; இன்றும் இருக்கிறான்: இப்போதும் இருக்கிறான்; அங்கும் இங்கும் எங்கும் இருக்கிறான்' என்று பிரகலாதன் சொன்னதும், 'இங்கே இந்தத் தூணில் நின்று கொண்டிருக்கிறானா? சொல்லு' என்று மிரட்டுகிறான் இரணியன். 'இல்லாவிட்டால் இல்லையென்று ஒப்புக் கொண்டு விடு' என்று கர்ஜிக்கிறான்.

'தூணில் நின்றுளன் என்னில்... நிரப்புதி நிலைமை' என்று கர்ஜிக்கும் இரணியன், பிள்ளையையும் 'கள்வ!' என்றே அழைக்கிறான். ஒளித்துக் கிடக்கும் கள்வனிடம் பக்தி கொண்டிருப்பவனும் கள்வன்தானே?

கம்பன் பாடிய பிரகலாத சரித்திரம்



சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

16. மதயானை யார்!

கொடுஞ் சினங் கொண்டு கொல்ல வந்தவன் கடவுளைக் குறித்து மறுபடியும் விவகாரத்தில் சிக்கிக் கொண்டான். நாராயணன் என்ற பெயரைப் பிள்ளை சொன்னதுமே கோபம் மூண்டு, 'நீ சொன்ன பெயரையுடையவன் என்னை எதிர்த்துத் தோற்று ஓடிப் போய்க் கடலில் ஒளித்து உறங்கிக் கிடக்கிறவன் தானே!' என்று இரணியன் சொல்லி விட்டானல்லவா? அந்தக் கடலை இப்போது கண்டு பிடித்து எதிரியை எப்படி மீண்டும் போருக்கு இழுப்பது என்பது இரணிய ஸர்வாதிகாரத்திற்கும் புலப்பட வில்லை.

முந்திய தலைமுறைகளில் இரணியனுடைய முன்னோர் பலரைக் கொன்ற எதிரி அவன். இதே தலைமுறையில் தம்பி இரணியாட்சனைப் பன்றியாக வந்து கொன்று தீர்த்து விட்ட எதிரி. பழிக்குப் பழி வாங்க வேண்டியது அவசியம்தான். ஆனால் கண்ணுக்குப் புலனாகாமலே ஒளித்திருப்பவனை எப்படித் தேடிப் பிடிப்பது?

இரணியனது 'ஸர்வ வல்லமை'யால் கடவுளையும் தோற்கடிக்க முடியுமாம்; கண்டு கொள்ளத்தான் முடியவில்லையாம்.

கடலில் ஒளித்து உறங்குவதாகப் புராணம் சொல்லுகிறது. வேதாந்தமோ 'கடலில் மட்டுமா? – எங்கும் தான் ஒளிந்து உறைகின்றான்' என்கிறது. 'உறங்கவா செய்கிறான்? — உறங்குவது போல் எல்லாவற்றையும் அறிந்து கொள்கிறான்; அறிதுயில் அன்றோ அது!' என்றும் தெரிவிக்கிறது வேதாந்தம்.

காரியவாதியான இரணியனுக்கு, எல்லாம் வார்த்தைகளைக் கொண்டு ஏமாற்றுகிற வித்தையாகத்தான் தோன்றுகிறது.

இரணியனுக்குப் புயவலிமை உண்டு; அறிவின் 'மிருகபலமும்' உண்டு; தபோ பலமும் உண்டு. ஞான பலம் இல்லை; பக்தி என்ற சக்தி கொஞ்சமும் இல்லை.

'இந்தச் சிறு பிள்ளையும் சோம்பேறி வேதாந்தம் பேசுகிறானே!' என்று கவலைப் பட்டான். 'உன் பொருளற்ற வேதாந்தத்தை மறந்து விடு; வேதம் ஓது. குரு சொல்லிக் கொடுத்தபடியே!' என்று தான் சொன்னான்; எச்சரிக்கை செய்தான்.

பிரகலாதனோ, கடவுள் 'உள்ளத்துள்ளே ஒளித்து நிற்கிறான்; உடலுக்கு உடலாய் உயிருக்கு உயிராய் உணர்வுக்கு உணர்வாயிருக்கிறான்' என்று மீண்டும் சொல்லவே, இரணியனுக்குக் கோபமும் வெறுப்பும் அதிகரித்தன. கொலை முயற்சிகளை ஏவி விட்டுப் பார்த்தான்.

தானே கொல்ல வந்த நிலையில், 'உலகம் தந்தவர் யார்?' என்ற விவகாரத்தில் சிக்கிக் கொண்டான் இரணியன். ஆனால் இத்தகைய வேதாந்த விவகாரங்களிலே, எந்த வாசல் வழியாகப் புகுந்தாலும் அந்த வாசல் வழியாகத் திரும்பி விடுகிறோம் அல்லவா! இரணியனுக்கும் இதே கதி தான்!

எனினும் எப்படியாவது கண்டு கொள்ள வேண்டுமென்று துடிக்கிறான். காட்சி தான் ஞானிகளும் விரும்புவது. ஆனால் இரணியன் விரும்பும் காட்சியின் நோக்கம் வேறு. இந்தச் சிறு பிள்ளைக்காக அந்தக் கடவுள் தலையிட்டு முகம் காட்டினால் பழிக்குப் பழி வாங்கி

விடலாமே, இறந்த தம் பிக்காகவும், முன்னேருக் காகவும்!

ஸ்தூலமாக ஏதாவது ஒரு பொருளில் பிரகலாதன் கடவுளைக் காட்டிவிட்டால் போதும்; இனிமேல் 'கடவுள்' உண்டா, இல்லையா' என்ற விவகாரத்திற்கே இடமில்லாதபடி முடிவு செய்து விடலாமே!

எனவே சிரித்துக் கொண்டு.'அடேபையா, அவன் எங்கும் இருக்கிருன் என்ருல், இந்தத் தூணில் இருக்க வேண்டுமே!' என்று கேட்கிருன். எவ்வளவோ புத்திசாவித்தனமாய்க் கேட்பதாகத் தான் எண்ணம்.



கடவுளைத் தேடிஎங்கேயோ ஒரு கடலுக்குப் போகவேண்டியதில்லை; ஏதோ ஒரு மலைக்குப் போகவேண்டியதில்லை; ஊரூராய் அலைய வேண்டியதில்லை. 'இதோ இந்தத் தூணில் இருந்தால் ......' என்று இரணியன் சொன்னனே அவ்வளவு அருகிலுள்ள தூணை நோக்கிக் கூடப் போக வேண்டியதில்லையாம். 'தந்தையே, நீர் இருக்கும் இடத்திலிருந்தே ஒரு சாண் அளந்து பாரும்; அந்தச் சாணுக்குள்ளேயே இருக்கிருன்; சிக்கெனப் பிடித்துக் கொள்ளலாம்' என்கிருன் ஞானச் சிறுவன்.

தூணில் இல்லை என்ருல் எங்குமுள்ள கடவுள் இல்லை தானே! தூணில் உண்டு என்று சிறுவன் சொல்லக் கடவுளும் அங்கே அகப்பட்டுக் கொண்டால், அவனை ஒழித்து விட்டு 'இனி இல்லை ஆயினன்!' என்பதாக முடிவு கட்டி விடலாமே.

இந்த நிலையிலுள்ள இரணியனுக்குப் பிரகலாதன் சொல்லப் போவதென்ன! 'தூணிலும் இருக்கிருன்: துரும்பிலும் இருக்கிருன் கடவுள்' என்று பிரகலாதன் சொன்னதாய்ச் சாதாரணமாகக் கதை சொல்வதுண்டு. ஆனல் கம்பன் சொல்வதென்ன!

சாணினும் உளன்!

தூணில் இருப்பதாய்ச் சொன்னலும், துரும்பில் இருப்பதாய்ச் சொன்னலும், பெரிய கடலிலோ மலையிலோ இருப்பதாகச் சொன்னலும், ஏதோ ஸ்தூலமாகப் பேசுவதாய்த்தானே ஏற்படுகிறது! எனவே பிரகலாதன்,

சாணினும் உளன்

என்று பதில் சொல்லத் தொடங்குகிருன், 'இந்தத் தூணில் இருந்தால் காட்டு' என்று அறை கூவிய இரணியனை நோக்கி.

ஆனல் சாணிலுள்ள தத்துவத்தைத் தான் இரணியன் பார்க்க முடியுமா! ஒவ்வொருவனுக்கும் தன் கையால் உடம்பு எண் சாண் என்று இருக்கும் போது, உலகம் தந்த விசுவரூபம் ஒரு சாணுக்குள் அடங்கி விடுவது எப்படி!

அணுவைப் பிளந்தாலும் அவனைக் காணலாம்!

சாணில் தான இருக்கிருன்!— அவ்வளவு தூரம்தான் எதற்கு! அணுவுக்கு அணுவாயிருப்பவனை ஒரு சாண் அளந்து தான் கண்டு பிடிக்க வேண்டுமா!

அணுவில் தான இருக்கிருன்! அணுவைக் கூறு கூருகப் பிளந்து பகுத்துப் பார்த்தாலும் அந்த மிகச் சிறு பகுப்

பிலும் இருக்கிறான் இறைவன் என்று பிரகலாதன் சொல்லுகிறான். 'அணுவினைச் சதகூறு இட்ட கோணினும் உளன்' என்கிறான் பிரகலாதன்.

அணுவினை உடைத்துக் கூறிட்டு அந்த நுண்ணிய பகுதிக்குக் 'கோண்' என்று ஒரு பெயரும் கொடுத்துப் பார்க்கிறது கவிஞனது மனோபாவம். அணுவைக் கூறிட்டுப் பிளந்ததெல்லாம் இந்த விஞ்ஞான யுகத்திலே தான்; இக்கால இரணியர் செயல் தான்!

விஞ்ஞானம் பகுத்தறிவு கொண்டு நீள நோக்கித் துருவி ஆராய்ந்து கண்டு பிடிப்பதையும் கவிமேதை ஒரே மின் வெட்டில் கண்டு காட்டக்கூடும் என்பர். இதற்கு ஒரு சான்றாகக் காட்டலாம், 'அணுவினைச் சதகூறிட்ட கோண்' என்று கம்பன் கூறுவதை.

அணுவைப் பிளந்த அறிவு கடவுளுண்மையையும் பிளந்தறிந்து விட்டது!— எனக் கருதுவோருண்டு, ஆனால் கம்பனுடைய பிரகலாதனோ அணுவைப் பிளந்து காணும் பயங்கர சக்தியிலும் தெய்வ சக்தியைக் காண்கிறான்.

மாமலையிலும் உளன்

சின்னஞ் சிறிய அணுவையும், அணுவைக் கூறிட்டுப் பிளந்த கோண் என்ற பகுதியையும் குறித்துப் பேசுகிறவன், பென்னம் பெரிய மலையிலும் இறைவன் இருப்பதாகக் கூறுகிறான்.



கோணினும் உளன்: மா
மேருக் குன்றினும்
உளன்

என்கிறான்.

சூட்சுமத்திற்கும் சூட்சுமமாக இருப்பவன், ஸ்தூலத்திற்கும் ஸ்தூலமாக இருக்கிறானும். இவ்வளவு தூரம் பேசிய பின்பும் இரணியன் தன் கேள்விக்கு நேரான விடை கிடைக்கவில்லையே என்று கருதக் கூடுமல்லவா!

எனவே 'இங்நின்ற தூணினும் உளன்' என்கிறான். ஏன், இரணியன் வீட்டுத் தூணில் இருக்கக் கூடாது என்ற நிர்ப்பந்தம் ஒன்றும் இல்லையே கடவுளுக்கு!

தூணிலும் உளன்

இப்போது தான் தன் கேள்விக்கு விடை கிடைத்து விட்டதென்று இரணியன் நினைக்கக் கூடும்; அப்படியே தான் நினைக்கிறான். அணுவினுள்ளே புகுந்து கடவுளைப் பார்க்கவும் இரணியனால் இயலாது; மாமேரு மலைக்கும் போய்த் தேட முடியாது! 'பக்கத்திலிருந்த தூணையாவது சோதித்துப் பார்த்து விடுவோம்!' என்று தானே எண்ணியிருக்கிறான்.

சொல்லளவிலேயே பொருள்கொண்டு தந்தை மயங்கிக் கொண்டேயிருக்கக் கூடாது என்று தான் மைந்தன் உடனே பளிச் சென்று, 'தூணினும் உளன்' என்று பதில் சொல்லிவிடவில்லை, இரணியன் கேள்விக்கு. 'சாணினும் உளன்' என்று தொடங்கிச் சின்னஞ் சிறிய, பென்னம் பெரிய பொருள்களைப் பிரஸ்தாபித்து விட்டு, அப்பால், 'தூணினும் உளன்' என்கிறான்.

நீ சொன்ன சொல்லிலும் உளன்

'தூணினும் உளன்' என்று சொல்லி அப்படியே நிறுத்தி விடவும் இல்லை. ஏதோ ஸ்தூலமான பொருளாகக் கடவுளையும் எண்ணி விடலாகாதே என்று, 'நீ சொன்ன சொல்லினும் உளன்' என்கிறான். அஞ்ஞானத்திற்கோ, விபரீத ஞானத்திற்கோ இடமில்லாமல் கடவுளுண்மை உணரப்பட வேண்டும் என்ற இதயத் துடிப்பைப் பிரகலாதனது விடையில் காண்கிறோம்.

இரணியன் சொன்ன சொல்லிலும் இறைவன் உளன் என்பதற்கு மேல் என்ன தான் சொல்ல முடியும்?— என்ன தான் சூட்சும ஞானம் பேச முடியும்?

'கடவுள் எங்கே இருக்கிறான்!' என்ற கேள்விக்கு, 'அவன் எங்கும் இருக்கிறான்' என்று பதில் சொல்வதைக் காட்டிலும், 'நீ கேட்ட அந்தக் கேள்வியிலும் இருக்கிறான்' என்று சொல்வது மிகவும் பொருத்தமானது. 'ஆண்டவன் இல்லை' என்று சொல்லுகிறவனை நோக்கி, அந்த 'இல்லை' என்பதிலும் அவன் இருக்கிறான் என்று சொல்வது சாமர்த்தியமான பேச்சல்ல; மிகவும் பொருத்தமான வேதாந்த உண்மை, நமது சமயப் பண்பாடு.

அதிசயக் கவிதை

இனி, பிரகலாதன் விடையாகிய இந்தப் பாட்டு முழுமையும் பார்க்கலாம், இதன் கவிதா ரூபத்துடன்:

சாணிலும் உளன்;ஓர்
தன்மை அணுவினைச்
சதகூ(று) இட்ட

கோணினும் உளன்;மா
மேருக் குன்றினும்
உளன்;இந் நின்ற

தூணினும் உளன்;நீ
சொன்ன சொல்லினும்
உளன்;இத் தன்மை

காணுதி விரைவின்'
என்றான்; நன்றெனச்
கனகன் சொன்னான்.

[ஓர் தன்மை அணு – ஒரு தன்மையாகவுள்ள அணு. சதகூறு – நூறு பங்கு; (இங்கே) எண்ணிறந்த கூறுகள். கோண் – அணுவை இவ்வாறு கூறு செய்த நுண்ணிய பகுதிக்குக் கம்பன் கொடுத்திருக்கும் பெயர், மேருக் குன்று – (இங்கே) மேருமலை. இந் நின்ற – இதோ இங்கே நிற்கிற. இத் தன்மை – இந்த உண்மை நிலையை. கனகன் – இரணியன்.]

'தூணிலும் உளனோ!' என்று கேட்டவனுக்கு நேரடியாகப் பதில் சொல்லிவிடாமல் எங்கெல்லாமோ சுற்றிச் சுழன்று வருவதுபோல் அமைந்திருக்கிறது இச் செய்யுள், பொது நோக்காக நோக்கும்போது.

தூணிலும் உளன்

என்ற விடை தொடக்கத்திலும் இல்லாமல், முடிவிலும் இல்லாமல் இடையே வந்து விழுந்திருப்பது கவனிக்கத் தக்கது.

பரமாத்மாவின் எங்கும் நிறைந்த நிறைவை – ஸர்வ வியாபக சக்தியை – எப்படியாவது கொஞ்சம் உணர்த்தி இரணியனையும் சிந்திக்க வைக்கலாமோ! —என்பது உயிர் நிலைப்பொருள்.

காணுதி விரைவின்

என்று, ஆத்திரப்படாத பிரகலாதனும் அவசரப்படுவதைப் பாருங்கள்,

காலம் வந்து கைக்கூடும் வாய்ப்பு நேர்ந்து விடுகிறது. நாடக பாத்திரங்கள் விரைகின்றன. அப்படி அந்த வியாபக சக்தி ஆட்டி வைக்கிறது.

காணுதி விரைவின்
என்றான்; நன்றெனக்
கனகன் சொன்னான்

என்பது இந்த மந்திரக் கவிதையின் வேகம்.

இதுவரை எங்கேயோ எப்படியோ உறங்கிக் கிடந்தது போன்ற மகாசக்தி எரிமலை போல விழித்துக் கனன்று சீறப் போகிறது. ஆனால் அதற்கு முன்பே 'அதிகார'ச் சீற்றத்தையும் காண்கிறோம்.

'உம்பர்க்கும் உனக்கும்
ஒத்(து)இவ் உலகெங்கும்
பரந்து ளானைக்

கம்பத்தின் வழியே
காணக் காட்டுதி;
காட்டி டாயேல்,

கும்பத்தின் கரியைக்
கோள்மாக் கொன்றென
நின்னைக் கொன்(று)உன்

செம்பொத்த குருதி
தேக்கி உடலையும்
தின்பென் !' என்றான்.

[உம்பர்க்கும் – தேவர்களுக்கும். கும்பத்தின் – இரண்டு கும்பங்கள் அல்லது குடங்கள் கவிழ்த்தாற் போன்ற மஸ்தகத்தை யுடைய. கோள்மா – வலிய சிங்கம். குருதி – இரத்தம்.]

சிங்கம் யானை மத்தகத்தைப் பிளந்து இரத்தத்தைக் குடிப்பது போன்ற ஒரு காட்சி இரணியனது மனக் கண்முன் தோன்றுகிறது. தானே சிங்கம் என்பதில் இரணியனுக்கு ஐயமே இல்லை. ஆனால் அந்த மத்தக யானை – மதயானை—யார்? இரணியனே மத யானையார்?—இல்லையா?

கம்பன் பாடிய பிரகலாத சரித்திரம்



சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

17. மூன்று சிரிப்பு

கடவுள் உலகமெங்கும் பரந்துள்ளவன் என்ற கொள்கை இரணியனுக்குக் கொஞ்சமும் பிடிக்க வில்லை. 'அந்தக் கற்பனையை நீ நம்புவாய்; உன்னுடைய தேவர்கள் நம்புவார்கள்; நான் நம்புவேனா!' என்பது இரணியன் மதம்.

இரு வேறு மனநிலை

உலகம் தந்தவன் உலகம் எங்குமே இருக்கிறான் என்பது பிரகலாதன் வாக்கு. அப்படிப்பட்ட ஒருவன் எங்குமே இல்லையென்று துணிந்தவனல்லவா இரணியன்! இவன், ஒரு சாணுக்குள்ளும் கடவுள் இருக்கத்தான் செய்கிறான் என்ற கதையை நம்புவது எப்படி?

எங்கும் ஆகி நிற்கும் — அண்ட பகிரண்டமெல்லாம் வியாபித்தும் கடந்தும் இருக்கும் - ஆண்டவன் அணுவுக்கும் அணுவாயிருக்க முடியுமா? அவன் தன்னைப் போல் ஒரு பெரிய சிங்காசனம் அமைத்துக் கொண்டு ஆர்ப்பாட்டம் செய்யாமல், அணுவுக்குள்ளே குறுகிப் போய், அடங்கி ஒடுங்கி ஒளித்துக் கொண்டிருக்கிறான் என்ற கதையை இரணியனது தன்மானத் தனிவீரம் ஒப்புக் கொள்ளுமா?

பெரிய பெரிய பொருள்களில் இறைவன் இருக்கிறான் என்பதையே நம்ப முடியவில்லை. மாமேரு மலையிலோ இமய மலையிலோ கடவுள் இருக்கிறானென்றால், அங்கே எந்தப் பகுதியில் எப்படி மறைந்திருக்கிறான் என்பது தெளிவாக இல்லையே பிரகலாத வாக்கியத்தில். எந்தப் பொந்தில், குகையில் போய்த் தேடுவது?

'நீ சொன்ன சொல்லினும் உளன்' — கடவுள் இல்லையென்று நாஸ்திகர் சொல்லும் 'இல்லை'யிலும் இருக்கிறான் எல்லையில்லாத பரம்பொருள் — என்பதெல்லாம், மேலும் குழப்பத்தை உண்டாக்குவதுதான், விவகாரக் குட்டையைக் குழப்பிச் சேறாக்குவதுதான், இது இரணியன் கருத்து.

கடவுள் என்று ஒருவன் இருந்தால் அவனுடைய விலாசம் அல்லது முகவரி தேவை – தெளிவாகத் தெரிய வேண்டும்: இது இரணியன் மன நிலை. எனவே, 'தூணில் இருக்கிறானா' என்று கேட்டான். 'தூணில் இருக்கிறான், துரும்பில் இருக்கிறான்' என்று சொன்னால் துரும்பைக் கிள்ளிக் கிழித்துக் கசக்கிப் பார்க்கலாம்; அல்லது தூணை உடைத்துப் பார்க்கலாமே!

துரும்பில் கடவுளைத் துருவுவதைக் காட்டிலும், சாணில், கோணில் சிக்கிச் சங்கடப்படுவதைத் தூணில் தேடுவது தான் இரணியன் மன நிலைக்குக் கொஞ்சமாவது ஒத்து வருகிறது எனக் கருத வேண்டும். துரும்பைக் காட்டிலும் தூணுக்குள்ளாவது (அது பெரிய குழல் தூணாக இருந்தால்) ஒருவன் மறைந்து நின்று கொள்ள முடியுமல்லவா! ஹட யோகி குழிக்குள் புதைந்திருந்து வெளிப் படுவது போல் வெளிப் படுவதும் கூடுமே!

ஆகவே தான் 'தூணிலும் நின்றுளன் என்னில், கள்வ! நிரப்புதி நிலைமை' என்று கர்ஜித்தானா அப்போது?

கம்பத்தின் வழியே
காணக் காட்டுதி

என்று அதட்டுகிறானே இப்போதும். (இரணியன் வீட்டுத் தூண் குழல்-தூண் தானா?)

'நீ காட்டாமற் போவாயானால்...' என்று பயமுறுத்தவும் செய்கிறான். (உன்னை குழலாக இல்லை அத்தூண் என்ற துணிவா?)

'உன்னைக் கொன்று விடுவேன்' என்று தான் பயமுறுத்துகிறான். 'நானே உயிரை உண்டு விடுவேன்!' என்று ஏற்கெனவே பயமுறுத்திக் கொண்டு வந்தவன் தானே!

அப்படி வந்தவனை வணங்கிப் பிரகலாதன், 'என் உயிர் உன் வசத்திலே இல்லை; உயிர் தந்தவனே உயிரை எடுத்துக் கொள்ள முடியும்!' என்று ஏற்கெனவே எச்சரிக்கை செய்தும் இருக்கிறான். தான் அதற்குமுன் செய்த கொலை முயற்சிகளெல்லாம் பயன்படவில்லை யென்பதும் இரணியனுக்கு எச்சரிக்கையாக இருந்திருக்க வேண்டுமே!

இப்படி யெல்லாமிருந்தும் இப்போதும் இரணியன், 'நின்னைக் கொன்று உன் செம்பு ஒத்த குருதி தேக்கி உடலையும் தின்பன்!' என்று கோர விவரங்களுடன் பேசுகிறான். எப்படியாவது பிரகலாதனைக் கொல்வது இரணியனாகிய தனக்கு எளிதென்றும் சொல்கிறான்.


'எவ்வளவு எளிது!' என்பதைக் குறிப்பிடத்தான், 'யானையை மஸ்தகத்தில் அறைந்து கொல்வது சிங்கத்திற்கு எவ்வளவு எளிதான காரியமோ அவ்வளவு எளிதான காரியம் தன் வலிமைக்கு இந்தக் கொழுத்த சிறுவனைக் கொன்று தீர்ப்பதும்' என்றான்.

பிரகலாதனோ தான் ஏற்கெனவே சொன்னது போல் இரணியனால் தன் உயிரைக் கொல்வது எளிதன்று என்பதை மீண்டும் வற்புறுத்துகிறான். ஆனால் இந்த வாதப் பிரதிவாதத்திற்கு ஒரு முடிவு வேண்டுமல்லவா! எனவே, 'உன்னால் கொலை செய்ய முடியாது தான்; ஆனால் நான் தற்கொலை செய்து கொள்வேன். அவன் தோன்றா விட்டால்' என்கிறான் பிரகலாதன் கடைசியாக.

ஞானச் சிறுவனின் இந்த விடை ஒரு கொடிய சபதத்தோடு வெளிப்படுகிறது:

என்னுயிர் நின்னால்
  கோறற்(கு) எளியதொன்(று)
  அன்று; யான்முன்
சொன்னவன் தொட்ட
  தொட்ட இடந்தொறும்
  தோன்றுவாயின்,

'என்னுயிர் யானே
  மாய்ப்பன்; இன்னும்வாழ்(வு)
    உகப்பன் என்னின்,



அன்னவற்(கு) அடியேன்
அல்லேன்!' என்றனன்
அறிவின் மிக்கான்.

[கோறற்கு – கொல்லப்படுவதற்கு. என்னுயிர் யானே மாய்ப்பன்–நான் தற்கொலை செய்துகொள்வேன். அன்னவற்கு – அந்தக் கடவுளுக்கு.]

ஸர்வாந்தர்யாமியாகிய ஸர்வேச்வரன் தொட்ட தொட்ட இடமெல்லாம் தோன்றத்தானே வேண்டும்! இது வேதாந்த உண்மை; கடவுளுண்மை. இந்த உண்மை பொய்த்துப் போகுமானால், உலகு தந்த கடவுள் என்று ஒருவனுமே இல்லை என்றுதான் பொருள். அத்தகைய அராஜக உலகிலே 'தடியெடுத்தவன் தண்டல்காரன்' தானே? 'எரிகிற வீட்டில் அகப்பட்டது ஆதாயம் தானே?' இந்த நிலையில் இரணியனே தான் ஆண்டவன், ஆளுகிறவன், ஆளப் போகிறவன்!

அப்படியானால் வாழ்க்கையிலே ஒரு சுவையுமில்லை; கடவுள் இல்லாத உலகத்தில் உண்மையான வாழ்க்கையோ, வாழ்க்கை இன்பமோ இருக்க முடியாது. இது பிரகலாத சித்தாந்தம்.

எனவே, 'உன்னால் என்னைக் கொல்ல முடியாவிட்டாலும் நான் இறந்தே தீருவேன்' என்கிறான்.

ஆனால் 'உயிராசை' ஒன்று இருக்கிறதே; அது ஒரு வேளை தற்கொலை நோக்கம் நிறைவேறுவதைத் தடுத்து விட்டால் என் செய்வது! அப்படித் தானே பின்னும் வாழ்வைக் காதலித்து உயிரோடிருந்தால்,

அன்னவற்(கு) அடியேன்
அல்லேன்!

என்று பிரதிக்ஞை செய்கிறான் பிரகலாதன்.

ஆண்டவற்கு அடியானா யிருப்பதும், அடியார்க்கு அடியானா யிருப்பதும் பிரகலாத சித்தாந்தத்தின் உயிர்நிலை. இந்த நிலையை இழப்பது உயிரை இழப்பதினும் கொடியதாகுமே!

இந்தப் பொருள் நுணுக்கத்தையோ, பிரகலாத சபதத்தையோ இரணியன் கவனித்ததாகவே தோன்றவில்லை. கம்பத்தின் வழியே காணத் துடிக்கின்றான் இரணியன், பிரகலாதனது கடவுளை! இந்த மன நிலையில் பிரகலாத சித்தாந்தத்தின் மெய்ப் பொருளையோ உட்பொருளையோ கவனிக்க அவகாசம் ஏது!

கடவுளாசை இல்லாவிட்டாலும், நீண்ட நாளாக இரணியன் உள்ளத்தில் தன்னை ஒத்த ஒரு பகைவன் கிடைத்தால் போர் செய்து பார்க்கலாமே என்ற ஓர் ஆசை பதுங்கிக் கிடந்ததாம். வினோத விபரீத ஆசை தான்.

வீரனுக்குத் தகுந்த எதிரி கிடைத்து விட்டால் ஓர் 'உக்கிரமான உவகை'. பிறக்கிறது நெஞ்சிலே!—என்று ஒரு மேலை நாட்டுப் புலவர்



பாடியிருக்கிறார். புயவலிமை காட்டப் பகைவன் இல்லாததால் தசரதன் தோள் தினவு பிடித்திருந்ததாகக் கம்பனே பால காண்டத்தில் கூறியுள்ளான்.

இரணியனுக்கோ பேராசை பேராசை தான். ஆனால் சர்வாதிகார சக்கரவர்த்தி ஆகிவிட்டதும், தேவரும் மூவரும் யாவ ரும் முதுகு காட்டி ஓடி விட்டதும், பேராசை நிறைவேற வழி எங்கே! அந்த ஆசை உள்ளுக்குள்ளே போய் 'யாராவது ஒரு பகைவன்-தகுந்த பகை வன் - கிடைத்து விட்டால் ஆசை தீரக் "குஸ்தி" போட்டுப் பார்க்கலாமே!' என்று துடித்துக் கொண்டிருந்ததாம். ஒரு வேளை அந்த ஆசை கம்பத்தின் வழியாகக் கை கூடுமோ!

'இல்லை' என்கிறது பகுத்தறிவு. 'அந்த ஆசைக்கும் இந்தக் கம்பத்திற் கும் என்ன தொடர்பு!' என்றுதான் கேட்கின்றன தன்மானமும் தனிவீரமும்.

ஆனால் உள்ளத்திற்குள்ளே அடைபட் டுக்கிடந்த அந்த ஆசை எப்படியோ வெளிப்பட்டு வந்து விடுகிறது, இதயக் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்து குதித்து விடுகிறதாம் :

நசைதிறந்(து) இலங்க

[நசை – உள்ளத்திலுள்ள ஆசை.]

என்றவாறு, வெளிப்பட்டு விளங்குகிற தாம்-பேராசை-பகைவனைப் பார்க்கக் கூடுமோ என்ற பேராசை.

இந்த ஆசை வெளிப்பட்டு விளங்கவே பொங்குகிறான் இரணியன். ஆம்; பொங்குகிறது 'உக்கிர உவகை', பகை யைக் கொல்ல வேண்டுமென்ற வெறி.

'நன்று, நன்று' என்று சபாஷ் போடு கிறான் பிரகலாதன் வார்த்தைக்கு, 'சபாஷ்' சொல்லிச் சிரிக்கிறான். கடகட வென்று-இடிஇடியென்று.

இடியே விழுந்துவிட்டதா, என்ன! எங்கேயோ விசை திறந்து எப்படியோ இடிதான் விழுந்துவிட்டது என்றே சொல்லத் தோன்றுகிறதாம்.

ஆனால் உண்மையில் இடி விழவில்லை. ஓர் அறைதான் விழுந்துவிட்டது அந்த அழகான தூணிலே. இரணியன் கை தான் அப்படி ஓங்கி, 'அறையோ அறை!' என்று அறைந்துவிட்டது.

தூணில் கையை வீசி அறைந்தால் தூணுக்கு வலிக்குமா! கையல்லவா வலிக்கும்! ஆனால் இரணியன் கையைக் குறித்துக் கவலைப்படத் தேவையில்லை. தூண்தான் உடைந்தது.

ஆனால் தூணை உடைத்த கதை அணுவை உடைத்த கதையைக் காட்டி லும் கோரமாய்ச் சித்திரிக்கப்படுகிறது. கிணறு வெட்டப் பூதம் புறப்பட்ட கதைதான்.

இதைக் கடைசி அடியில்-ஒரே வாக்கி யத்தில்-சித்திரித்து விடுகிறது கம்பன் மேதை. அந்தச் சித்திரத்தைப் பார்ப்ப தற்கு முன், இரணியனது ஆசை வெளிப் பட்டதையும், அப்பால் நிகழ்ந்தவற்றை யும் படிப்படியாகப் பார்த்துவிடுவோம், கவிதை வாயிலாக.

ஒரே பாட்டு-ஒரே இசைச் சித்திரம். எத்தனை கோணங்களில் எத்தனை காட்சி கள்!

நசைதிறந்(து) இலங்கப்
 பொங்கி, 'நன்றுநன்(று)'
 என்ன நக்கு,
'விசைதிறந்(து) உருமு
 விழ்ந்த(து)!' என்னவே
 தூணின், வென்றி
இசைதிறந்(து) அமர்ந்த
 கையால் எற்றினன்,
 எற்ற லோடும்,
திசைதிறந்(து) அண்டம்
 கீறிச் சிரித்தது
 செங்கண் – சீயம்!

[நசை – உள்ளுக்குள்ளே அடங்கிக் கிடந்த ஆசை; பகைவனொருவன் கிடைத்தால் ஆசைதீரப் போரிட்டுப் பார்க்கலாமே என்ற விருப்பம், திறந்து-தன்னைப் பூட்டிச் சிறைப்படுத்தி வைத் திருந்த இதயக் கதவைத் திறந்து கொண்டு. இலங்க – விளங்கி. நன்று நன்று என்ன நக்கு – 'சபாஷ், சபாஷ்' என்று சொல்லிச் சிரித்துக் கொண்டு. விசை-வேகம்; பலம். உருமு – இடி. வி ழ் ந் த தென்னவே – விழுந்தாற் போலவே. தூணின் – எதிரிலே நின்ற தூணிலே. வென்றி – வெற்றி. இசை – புகழ். அமர்ந்த – அடங்கியிருந்த. எற் றினன் – மோதி அடித்தான். செங்கண் சீயம் – சிவந்த கண்களையுடைய சிங்கம்.]

பாடிப் பாடிப் பொருளாழம் காண வேண்டிய பாட்டு. சாதாரணத் தமிழ்ச் சொற்களின் சேர்க்கையிலே அணுவைப் பிளந்து காட்டுவது போல் அபார சக்தியை வெளிப்பட்டு விளங்கச் செய் கிறது இம்மந்திரக் கவிதை.

இரணியனுக்கு அகத்திலும் புறத்தி லும் உணர்ச்சியும் செயலும் ஆடிக் காட்

டும் நாடகம் முதல் வாக்கியத்திலே காணப்படுகிறது. இரண்டாவது மூன்ருவது அடிகளில், சமீபத்தில் இடி விழுந்துவிட்டது என்ற உணர்ச்சி பொங்கத் தூணில் இரணியன் அறைந்த அறை வருணிக்கப்படுகிறது.

அப்படி அறை கொடுத்த அந்தக் கை, எத்தனையோ போர்களில் வெற்றியையும் இசையையும் திறந்து காட்டியிருக்கிறதாம் இரணியனுக்கு.

'உலகம் எனக்கு ஒரு சிப்பிதான். என் வாளால் எளிதில் பிளந்துவிடுவேன்!' என்கிருன் ஒருவன் ஓர் ஆங்கில நாடகத்திலே. அப்படி வெற்றியையும் இசையையும் திறந்து காட்டியிருக்கிறதாம் இரணியன் கை.

அத்தகைய கையால் எற்றியதும்,-எற்றியதுமே – உக்கிர நரசிம்மாவதாரம் ஆகிவிடுகிறது.

திசைதிறந்து அண்டம்
சிறிச் சிரித்தது
செங்கண் — சீயம்


என்ற சப்த ஜாலத்திலே உக்கிர நரசிங்கத்தின் கர்ஜனைச் சிரிப்பையே கேட்கிருேம்.

கவிதாசந்தம் மலை வீழருவி போல் சாடி வருகிறது; படு வேகத்துடன் வந்து விழுகிறது; இந்த வீழ்ச்சியின் வேகத்துடன் ஒப்பிட்டால், மேலே மலை மீது ஓடி வரும் பிரவாகத்தின் வேகம் வேகமாய்த் தோன்ருது; ஒரு தேக்கம் போல் தேங்கி வருவது போல் தோன்றும். இவ்விதமாக அமைந்திருக்கிறது பாட்டின் மூன்றும் அடியில் அமைந்திருக்கும்

எற்றினன் எற்ற
லோடும்

என்பது.

பாட்டு முழுமையும் பாடிப் பாடிப் பரவசமாக வேண்டியது தான். பிரகலாதனைப் போல் (இரணியனைப் போல் அல்ல!) ஆனந்த பரவசமாகிக் கவிதை வாயிலாகவே இந்த உக்கிர நரசிம்ம மூர்த்தியைத் தரிசிக்கலாம். நமது வாழ்வின் குறுகிய எல்லைக் கோடு தாண்டி அப்பால் செல்லும் பேறு பெறுகின்ருேம் இந்தக் கவிதானுபவத்திலே.



பி. ஸ்ரீ.

18. நாலு ஆவேசம்

'தொட்ட தொட்ட இடந்தோறும்' தோன்றுவான் கடவுள் என்றான் பிரகலாதன், தனக்குத் தோன்றிய அந்தத் தோற்றத்தைக் கொண்டு. இரணியனுக்கும் அவன் தொட்ட தொட்ட இடத்திலே தோன்றுவான், தோன்ற வேண்டும் என்றே சொல்லி வைத்தான்.

ஆனால் இந்த உக்கிர நரசிங்கத் தோற்றத்தைப் பிரகலாதன் தான் எதிர்பார்த்திருக்க முடியுமா!

இரண்டு போர்வைகள்

சிங்கத்தையும் சிவந்த கண்களையும், 'திசை திறந்து அண்டம் கீறி'ய அந்தச் சிரிப்பொலியையும் கேட்டுப் பிரகலாதன் கொஞ்சமும் அஞ்சவில்லை. இரணியன் தான் கொஞ்சமாவது அஞ்சக் கூடியவன்!

நல்லறிவுக்கு அச்சமில்லை; பேயறிவுக்கும் வெறிகொண்ட மிருக பலத்திற்கும் தான் அச்சம் தெரியுமோ!

பகவானுடைய உக்கிர கோபமும் பக்தியையே தூண்டி விடுகிறது பிரகலாதனுக்கு. இரணியனுக்கோ பகைமைக்கும் பரிகாசத்திற்கும் பழிக்குப் பழி வாங்கும் நோக்கத்திற்குமே இலக்கா கிறது, இந்தக் கொடிய பயங்கர தெய்வ மாட்சியும்!

இரணியன் செய்த தீமையெல்லாம், ஆணவக்கொடுமைகளெல்லாம், நினைத்த பயங்கர நினைவுகளெல்லாம், விரும்பிய கொடிய விருப்பங்களெல்லாம் சேர்ந்து அன்புக் கடவுளுக்குப் போர்த்த போர்வைதான் உக்கிர நரசிங்க வடிவம்.

இந்த உருவத்தையும் அன்புப் போர்வை போர்த்து வழிபடுகிறது பிரகலாதனுள்ளம்:

'நாடி நான் தருவென்!'
என்ற நல்லறி
வாளன், நாளும்

தேடி நான் முகனும்
காணாச் சேயவன்
சிரித்ததோடும்,

ஆடினான்; அழுதான்;
பாடி அரற்றினான்;
சிரத்திற் செங்கை

சூடினான்; தொழுதான்;
ஓடி உலகெலாம்
துகைத்தான் துள்ளி!

[நாளும் - எந்நாளும். நான்முகனும் - பிரமதேவனும். சேயவன் - சேய்மையில் உள்ளவன்; தூரத்தில் உள்ளவன். அரற்றினான் - ஆரவாரம் செய்தான். செங்கை - சிவந்த கைகள். உலகெலாம் - அந்த நிலப்பகுதி யெல்லாம். துகைத்தான் - துவைத்தான்; சஞ்சரித்தான்; மிதித்தான்.]

'நாடி நான் தருவென்!' என்று பிரகலாதன் கூறுவதில் ஆணவம் துளியும் இல்லை; குழந்தை யுள்ளம்தான் — நல்லறிவுள்ள குழந்தைமைதான் — காணப்படுகிறது. நாபிக் கமலத்திலுள்ள நான்முகச் சேய்க்கும் 'சேயவன்,' ஞானக் குழந்தைகளுக்கு மூச்சுக் காற்றைக் காட்டிலும் நெருங்கிய தொடர்புடையவன் என்பது பக்தி மதம் கண்டு காட்டும் அதிசய உண்மைகளில் ஒன்று. இந்த உண்மையுணர்வு தன்னை வெளியிட்டுக்

கொள்ளும் பாவனை ஆடலும் பாடலும் தான்; அழுகையும் தொழுகையும் தான்; விம்மலும் துள்ளலும் தான்!

இரணிய ஆவேசம்

பிரகலாதன் இப்படிப் பக்தி பண்ணுவதைத் திரும்பிப் பார்க்கவேயில்லை இரணியன். சிரித்த சிங்கத்தையே பார்க்கிறான். தன் வீட்டுத் தூணுக்குள்ளே உத்தரவில்லாமல் புகுந்து நன்ற குற்றத்துடன், இப்படிச் சிரிக்கவும் செய்கிறதே! — என்ன அசட்டுத் துணிவு!

அந்தப் பழைய பகைவன் தான் — தன் முன்னோரையும் தம்பியையும் கொன்றவன் தான் — எங்கேயோ கடலில் உறங்கிக் கொண்டிருக்கிறானென்று தானும் பிறரும் நம்பியிருந்த அந்த ஹரி தானா, வந்து விட்டானா இப்படிச் சிங்கத் தோல் போர்த்துக் கொண்டு! அவனைத்தான் — சிங்க வேடக்காரனைத்தான் — கேட்டு விடுவோமே! பிரகலாதனைக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் இல்லையே இப்போது!

இரணியன் முன்னமே திக்கு விஜயம் செய்தவன் தான். எவ்வளவு ஊக்கத்தோடு, எத்தகைய வலிமையோடு, அந்த விஜயப் போக்கின் அதிர்ச்சியிலேயே உலகமெல்லாம் நிலை பெயரும்படி, நிலைகுலையும்படி, படையெடுத்திருக்கிறான்!

அந்த விஜயம் முற்றுப் பெற்று விட்டதென்றே எண்ணியிருந்தான். ஹரியைக் காணாததால் அவனும் தோற்று ஓடி விட்டதாகக் கருதியிருந்தான்.

'இனி இவனைத் தப்பி ஓடிப் போக விடாமல் நமது திக்விஜயத்தைப் பூர்த்தி செய்து கொள்வோம்' என்று துணிகின்றான். பகைவரை நாடித் தேடி ஓடிச் சாடிக் கொண்டிருந்த இரணியனுக்கு அதிமுக்கியமான பகைவன் இவனது வீட்டிலேயே பதுங்கிக் கொண்டிருந்தானென்றால், ஆத்திரம் எப்படிப் பொங்கி வரும்!

பழைய திக்விஜயத்திலே தான் கம்பி மாய்ப் போன அந்தப் போக்கின் அதிர்ச்சியிலேயே வெற்றி கண்டதுண்டு. இப்போது பேச்சின் அதிர்ச்சியிலேயே எதிரியை ஒடுக்கி விடலாம், ஒழித்து விடலாம் என்று எண்ணி விட்டதுபோல் அதட்டுகிறான்:

'ஆரடா சிரித்தாய்?
சொன்ன அரிகொலோ?
அஞ்சிப் புக்க
நீரடா போதா(து)
என்று நெடுந்தறி
தேடினாயோ?
போரடா பொருதி
யாயின், புறப்படு
புறப்படென்றான்,
பேரடா நின்ற
தாளோ(டு) உலகெலாம்
பெயரப் போவான்!



[அரிகொலோ — விஷ்ணு தானோ நீ. நெருந்தறி — நீண்ட தூண். பொருநியாயின் — போர் செய்யக் கூடியவனால். பேர் — பெயர். அடாநிற — அடுத்து நிற்பதற்கு உரிய. தாளோடு — வலிமையோடு. பெயர — நிலை பெயரும்படி.]

இரணியனுடைய ஆத்திரத்தையும் ஆவேசத்தையும் கோபத்தையும் அப்படியே சப்தசித்திரமாக்கிக் காட்டும் பாட்டு இது. இந்த அட்டகாச ஆர்ப்பாட்டங்களுக்கு ஒன்றும் பதில் இல்லை எதிரியிடமிருந்து.

பிரகலாதனோ தன் பக்தியிலேயே மூழ்கி ஆனந்தக் கனவு-லோகத்தில் திக் விஜயம் செய்து கொண்டிருக்கிறான்!

புயலுக்கு முன்

சிரிப்புக்கு எதிர்ச் சிரிப்பு வந்தது. இரணியன் பிரகலாதனை நோக்கி, 'சிங்கம் வந்துவிட்டதடா உன்னைக் கொல்ல. உன் அப்பன் வடிவத்திலேயே!' என்று பயமுறுத்தினானே, அந்தச் சிங்க வடிவத்திலேயே வந்து விட்டான் உலகத்திற்கெல்லாம் அப்பன்!

ஆனால் இரணியன், 'புறப்படு புறப்படு அடா!' என்று அடுக்கினானே, அந்த அடாவடிப் பேச்சுக்குப் பதில் ஒன்றுமே புறப்படவில்லை.

ஒரு பயங்கர அமைதி — கடும் புயலுக்கு முன் வானத்திலே உள்ள ஒரு வஞ்ச அமைதி போல! இனிமேல்



செயல் தானே பேச வேண்டியது:
புயல் தானே வீச வேண்டியது!

செயலால் பேசுவதற்கு முன் வளர்ந்தாக வேண்டுமே! தூணிலிருந்து இன்னும் பிறந்தேயாகவில்லை இந்தச் சிங்கப் பிள்ளை!

இந்த விநோதப் பிரசவத்தையும், வளர்ச்சியையும் — இந்த வளர்ச்சியில் மட்டும் ஆத்திரம் தான்! — இதோ பாருங்கள்:

பிளந்தது தூணும்;
ஆங்கே பிறந்தது
சீயம்; பின்னை

வளர்ந்தது திசைகள்
எட்டும்; பகிரண்ட
முதல மற்றும்

அளந்த(து); அப் புறத்துச்
செய்கை யாரறிந்(து)
அறைய கிற்பார்?

கிளர்ந்தது ககன
முட்டை கிழிந்தது
கீழும் மேலும்!

[சீயம் - சிங்கம். பின்னை - பின். பகிரண்டம் - இந்த அண்டத்துக்கு வெளியிலுள்ள வேறு அண்டம். முதல மற்றும் - முதலியவற்றையும். அப்புறத்து - இந்த அண்டத்துக்கு அப்பாலுள்ள. அறைய கிற்பார் - சொல்ல வல்லவர். கிளர்ந்தது ...... கிழிந்தது - மிகுந்து மேலெழுந்து கிழித்தது. ககனமுட்டை - (இங்கே) உலக உருண்டை.]

படிப்படியாக வளர்ந்து வருகின்றது — சிசுவல்ல — சிங்க உருவந்தான். பல பாடல்களின் வாயிலாக வளர்கின்றது நம் கண்முன்பே இந்தக் காட்சி. சிங்கத்தின் வளர்ச்சி - வேகமோ படுவேகம் தான்! சொல்லத்தான் ஆறு பாடல்கள்.

தூண் பிளந்து விழுந்து விட்டது. நரசிங்கம் தான் ஓரே தூணாக நிற்கிறது இப்போது பூமிக்கும் வானத்திற்கும் இடையே!

வானத்தையும் ஊடுருவிப் போய் விடுகிறது; போய்க் கொண்டேயிருக்கிறது, — மேலே, மேலே, மேலே. இந்தச் சிங்க வடிவம் மேலோங்கிச் சென்ற எல்லையை மனோபாவத்தின் எல்லைக்கே விட்டு விடுகிறான் கவிஞன்.

கவிஞன் ஆவேசம்

மனோபாவத்தின் லகானை ஒரேயடியாக விட்டு விடவில்லை; சற்று விட்டுப் பிடிக்கிறான்:

எத்துணை போதும்
கையென்(று) எண்ணினால்,
இயம்பற் கொத்த

வித்தகர் உளரோ?
அந்தத் தானவர்
விரிந்த சேனை

பத்துநூ(று) அமைந்த
கோடி வெள்ளத்தாற்
பகுதி செய்த

அத்தனை கடலும்
மாளத் தனித்தனி
அள்ளிக் கொண்ட!

[எத்துணை போதும் - எத்தனை உள்ளன. வித்தகர் - (இங்கே) கணித நிபுணர்கள். பத்து நூறு அமைந்த கோடி வெள்ளத்தால் - ஆயிரம் கோடி வெள்ளம் என்னும் தொகையால்.]

ஒவ்வொரு அசுரனுக்கும் எதிராக ஒவ்வொரு சிங்கமுகம்; இரண்டு கைகள். ஒவ்வொரு முகத்திலும் முத்தீ ஜொலிப்பது போல் மும்மூன்று கண்கள்!

அந்த வாயோ, ... பார்த்துக் கொள்ளுங்கள்:

ஆயிரம் கோடி
வெள்ளத்(து) அயில்எயிற்(று)
அவுணர்க்(கு), அங்கங்(கு)

ஏயின ஒருவர்க்(கு)
ஓரோர் திருமுகம்;
இரட்டிப் பொற்றோள்;

தீயெனக் கனலும்
செங்கண் சிரந்தோறும்
மூன்றும்! தெய்வ

வாயினில் கடல்கள்
ஏழும் மலைகளும்
மற்றும் முற்றும்!

* * *

நான்கு ஆவேசங்களின் வளர்ச்சியைக் காண்கிறோம், இரணியன் ஆவேசம் பேச்சிலும் பிரகலாதன் ஆவேசம் பக்தியிலும், நரசிம்ம ஆவேசம் வளர்ச்சியிலும், கவிஞன் ஆவேசம் கவிதா சந்நதத்திலும் வளரக் காண்கிறோம்.

கம்பன் பாடிய

பிரகலாத சரித்திரம்



சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

19. மேரு வணங்குமா ?

கொடுமைக்குப் பேர்போன அசுரர்களைத் தோற்கடிக்க வந்திருக்கும் தெய்வ சக்தி, கொடுமையில் அசுரக் கொடுமையையும் மிஞ்சிவிடுவதாக வருணிக்கப் படுகிறது. தோற்றத்திலும் கொடுமை தரித்து, அசுரருக்குரிய வக்கிர தந்தங்களையும் ஆயுதமாக அணிந்து கொண்டல்லவா வந்திருக்கிறார் சிங்க மூர்த்தி !

பிறைச் சந்திரன் போன்ற தன் 'அசுர' வக்கிர தந்தங்களிலே அசுரர்களில் சிலரை அடக்கிக் கொள்கிறதாம் சிங்கம். அவர்கள் காட்டிய அதே கொடிய 'அடக்குமுறை' வழியேதான் !

நரசிம்ம ஆவேசம்

மற்றும் சிலரை நிலத்திலே தேய்க்கிறதாம்; மேரு மலையில் தாக்குகிறதாம் கடலில் ஆழ அமுக்கி மேலே குமிழி எழச் செய்கிறதாம். சிலரை நெருப்பிலே நீட்டிச் சுருளும்படி வாட்டுகிறதாம்.

விரல்களில் பிசைகிறது; துண்டிக்கிறது; வாய்களைக் கிழிக்கிறது; தோலை உரித்துக் கிழிக்கிறது...இப்படியெல்லாம் வாசிக்க முடியாத, நினைக்கவும் முடியாத கொடுமைகள், ஏழு கவிகளை நிரப்பி விடுகின்றன.

கொடுமை வருணனைகளிலும் காண்கிறோம் கம்பனது கற்பனைத் திறனை, மனோபாவக் குதிரை படுவேகமாய்ச் சென்று சேரும் இடத்தைப் பாருங்கள் :

முப்புறத் துலகத்(து)
உள்ளும் ஒழிவற
முற்றும் பற்றித்
தப்புத லின்றிக்
கொன்று, தையலார்
கருவும் தள்ளி,

இப்புறத்(து) அண்டத்(து)
யாரும் அவுணரில்
லாமை எற்றி,

அப்புறத்(து) அண்டந்
தோறும் நடவின
சிலகை அம்மா !

[முப்புறத்து உலகத்து உள்ளும் – மூன்று வகை உலகங்களிலும். இப்புறத்து அண்டத்து – இந்த அண்டத்திலே, அவுணர் – அசுரர். எற்றி – அடித்து மோதி. அப்புறத்து அண்டந்தோறும் – பகிரண்டங்களிலும்.]

நின்று நின்று பொறுத்துப் பொறுத்துப் பார்க்கும் ஸர்வ சக்தி இறுதியாகப் பொறுமை இழந்தது போல் கொன்று தள்ளும் புரட்சி வெறியையும் வேகத்தையும் கவிதைக் குரல் காட்டுவதுண்டு. தேச பக்த கவி பாரதியும், 'வேரும் வேரடி மண்ணும் இல்லாமலே, வெந்து போகப் பகைமை பொசுக்குவான் !' என்று வருணித்திருக்கிறாரல்லவா !


இக் கருத்து எவ்வளவு அடக்கமாக,— எனினும் எவ்வளவு பயங்கரமாக,

தப்புத லின்றிக்
கொன்று, தையலார்
கருவும் தள்ளி

என்று இங்கே வெளிப்படுகிறது !

பாரதி வாக்கு, கவிதா தேவியின் கூக்குரல். யாழை மீட்டிக் கொண்டிருந்தவள் உணர்ச்சிப் பெருக்கிலே மெய்ம்

அப்புறத்(து) அண்டந்
தோறும் தடவின
சிலகை அம்மா!



மறந்து யாழை மறந்து கூச்சலிடுவது போல் அமைந்திருக்கிறது அந்த வாக்கு. அக் குரலும் இசையோடு இசையாக இசைந்துதான் வருகிறது.

ஆனால் கம்பன் வாக்கிலே கூச்சலோ, கூக்குரலோ இல்லை. அடக்கமான யாழிசையே தான் உணர்ச்சி- முழக்கம் செய்கிறது.

சிங்க மூர்த்தியின் சீற்றம் இன்னம் தணியவில்லை. மேலும் மேலும் அந்த உக்கிரம் அதிகரித்த வண்ணமாயிருக்கிறது:

தான்ஓடுங் காதென்(று)
அஞ்சித் தருமமும்
சலித்த தம்மா!

[சலித்தது - நடுங்கிற்று.]

எந்தத் தருமத்தின் பாதுகாப்பிற்காக இந்தத் தெய்வ கோபம் தோன்றியதோ, அந்தத் தருமமும் நடுங்கிற்று என்று உக்கிரத்தின் எல்லையைக் காட்டுகிறான் கவிஞன்.

மஹோபாயம் எப்படி லகானை விட்டுப் பிடிக்கிறது பாருங்கள்!

என்றெல்லாம் கட்டவிழ்த்து ஓடுகிற வேதாளம், பழைய முருக்க மரமாகிய உறைவிடத்தை விட்டு விடுவதில்லை. லகானை விட்ட கை அதை எட்டிப் பிடித்துக் கொள்கிறது.

வெகு விரைவிலே நடைபெற்று விடுகிறது இவ்வளவு அழிவு வேலையும்:

நினைவதன் முன்னம்
கொன்று நின்ற(து)அந்
நெடுங்கட் சீயம்!

[நெடுங்கண் சீயம் - நீண்ட பார்வையுள்ள சிங்கம்.]


இதை எழு கவிகளில் வருணிக்கத்தான் நேரம் வேண்டியிருக்கிறது கவிஞனுக்கு.

மூவர் படம்

அசுரப் பகைக் கூட்டத்திலே இப்போது இரணியனைத் தவிர வேறு

யாரும் எஞ்சி நிற்கவில்லை. 'தப்புதல் இன்றிக் கொன்று' தீர்ந்த பின்பு தப்பி நிற்கும் இருவருள் பிரகலாதனும் ஒருவன். இவனுக்குத் தான் அசுர உறவு போய் விட்டதே!

'சத்தியாக்கிரக' உறவு தேவர்களுடன் தான். ஆத்ம பந்துக்கள் தேவர்களும் சாதுக்களும் தானே. இந்தப் பிரகலாத



னைத் 'தேவ ரட்சகன்' ('வானவர் கனகன்') என்று சுட்டிக் காட்டுகிறான் கவிஞன்.

பாலைவனத்தில் முளைத்து வளர்ந்த தாம் ஒரு தரு. கேட்டதையெல்லாம், விரும்பியதையெல்லாம் உடனே கொடுப்பதல்லவா கற்பகதரு! தேவர்கள் விரும்புகிற இரட்சையை, சாதுக்கள் விரும்புகிற பாதுகாப்பைக் கொடுப்பது போல், அசுரர்கள் சிந்தித்துக் கொண்டே இருந்த நாசத்தையும் கொடுக்கிறது. இத் தருவின் பெயர் தான் பிரகலாதன்!

'தப்புதல் இன்றிக் கொன்று......தன் தீய சக்தி - ஆவேசத்திலே இப்போது தப்பிப் பிழைத்திருக்கும் இருவரையும்,

கனகனும், அவனில்
வந்த வானவர்
கனகனை

அனகனும்

[கனகனும் - இரணியனும். அவனில் வந்த - அவனிடம் தோன்றிய. அனகனும் - குற்றமில்லாத பிரகலாதனும்.] என்று சுட்டிக் காட்டுகிறான் கவி.

இனி இந்த இருவரோடு நரசிங்கத்தையும் ஒருசேரப் பார்ப்போம்:

கனகனும் அவனில்
வந்த வானவர்
கனகனை

அனகனும் ஒழியப்
பல்வே(று) அவுணரா
னவரை யெல்லாம்

நினைவதன் முன்னம்
கொன்று நின்ற(து) அந்
நெடுங்கட் சீயம்;

வனைகழல் அவனும்
மற்(று)அம் மடங்கலின்
வரவு நோக்கி.

[அவுணரானவரை – அசுரர்களை. வனை கழல் அவனும் – வீரக் கழலையுடைய இரணியனும். அம்மடங்கலின் – அந்தச் சிங்கத்தின்.]

பிளந்த தூணுக்கிடையே சிங்கத்தைக் கண்டதும்,

போரடா பொருதி
ஆயின் புறப்படு,
புறப்படு !

என்று கர்ஜித்த இரணியன், அந்தச் சிங்கத்தின் பயங்கர விசவரூப வளர்ச்சி கண்டும், தன் சினவெறியும் போர் வெறியும் குன்றாமலே நின்றான். தன் அசுரப் பிரளயத்தை முழுக்க வற்றடித்தது கண்டும் சற்றும் கிறங்கவில்லை. தேவர் கிறு கிறுக்கும்படி யுத்த சன்னத்தனாகி நிற்கிறான் :

வயிரவாள் உறையின்
வாங்கி, வானகம்
மறைக்கும் வட்டச்

செயிரறு கிடுகு
பற்றி, வானவர்
உள்ள நீய,

அயிர்படர் வேலை
ஏழும் மலைகளும்
அஞ்ச ஆர்த்(து), அங்கு

உயிருடை மேரு
என்ன வாய்மடித்(து)
உருத்து நின்றான்.

[வயிர வாள் – வச்சிராயுதம் போன்ற வாளாயுதத்தை. உறையின் வாங்கி – உறையினின்று உருவி எடுத்து. வானகம் – ஆகாயம். செயிர் அறு – குற்றமற்ற. கிடுகு – கேடயம். அயிர் படர் – நுண்மணல் பரந்த. ஆர்த்து – ஆரவாரித்து. உருத்து – கோபித்து.]

இரணியனது சலியாத கம்பீர நிலை இது. குலகிரிகள் அசைந்தாலும் அசையாத மன நிலை.

உயிருடை மேரு

வாக நிமிர்கின்றது, கத்தியும் கேடயமுமாகி. மலைகளும் கடல்களும் அஞ்ச முழங்குகின்றது, சிங்க கர்ஜனைக்கு எதிர்க் கர்ஜனையாக.

மலையாக நிற்கிறதாம் மதயானை ; பயம் தெரியவே இல்லையாம். பசித்த சிங்கம் பாயப் போகிறது. இந்த நிலையில் 'சத்தியாக்கிரகி' பிரகலாதன் அறிவு கூற முயல்கிறான் ; தந்தையைக் காப்பாற்றப் பார்க்கிறான் :

நின்றவன் தன்னை
நோக்கி, 'நிலையிது
கண்டு நீயும்

ஒன்றும்உன் உள்ளத்(து)
யாதும் உணர்ந்திலை
போலும் அன்றே!

வன்றொழில் ஆழி
வேந்தை வணங்குதி ;
வணங்க வேஉன்

புன்றொழில் பொறுக்கும்!
என்றான் உலகெலாம்
புகழ நின்றான்.

[நின்றவன் தன்னை – மேலே சொன்ன விதமாக நின்று கொண்டிருந்த இரணியனை. வன்றொழில் ஆழி வேந்தை – வலிய தொழில் தேர்ந்த சக்ராயுத பாணியான ராஜாதி ராஜனை. வணங்குதி – வணங்குவாய். புன்றொழில் – இழிந்த தொழில்கள்.]

இந்த நிலையிலும் பிரகலாதன் தனது 'ஸர்வரோக நிவாரண சஞ்சீவி மாத்திரை'யைத்தான் கொடுக்கப் பார்க்கிறான். அதாவது, சரணாகதி தர்மத்தை உபதேசிக்கிறான்.

உலகம் அராஜக உலகமன்று. ஒரு கடவுள் – வேந்தன் இருக்கிறான். இரணியன் போன்ற அசுர அதிகாரங்களின் ஆக்ஞா சக்கரங்களுக்கும் மேலாக ஒரு சக்கரம் இருக்கிறது. சக்ரபாணியும் இருக்கிறான். எந்த அசுர சக்தியும் தப்ப முடியாது. ஸர்வ சக்திக்குப் பணிந்து தானாக வேண்டும். சரணாகதி என்ற பணிவு நெறிதான் சரியான நெறி.

ஆனால் இத்தப் பிரகலாத வைத்தியம் இரணியனுக்குப் பயன்படுமா! ஏற்கெனவே பயன்படவில்லை. இந்த நெருக்கடி நிலையில் பயன்படுவது சாத்தியமா?

பிரகலாதனை மறந்து, இறந்த அசுரர்களை மறந்து, தன்னையும் மறந்து, உதட்டை மடித்துக் கடித்துக் கொண்டிருக்கும் இரணியனா சரணாகதி செய்வான்!

கம்பன் பாடிய பிரகலாத சரித்திரம்



சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

20 வாளுக்கே சரணாகதி!

'வணங்கு; வணங்கவே மன்னிக்கப் பெறுவாய்' என்றான் பிரகலாதன். சரணாகதி என்றால் காலில் விழுந்து வணங்குவது மட்டுமன்று. மன மெய் மொழிகளில் வணக்கம் செலுத்துவது சரணாகதி.

முரண்பட்ட இரு நிலை

இரணியனோ வணங்காமுடித் தனி வீரன். ஆன்மைக்கும் ஆணவத்திற்கும் வேற்றுமையில்லை என்று கருதுபவன், ஏன், ஆணவமே ஆன்மை என மயங்குபவன். அடியார் நிலைபாடிய சரணாகதி அடிமைத்தனமே என்று நம்புகிறவன்.

ஆனால் உண்மையாகவே அடிமைச் சங்கிலி தழுவிக் கிடக்கிறது இரணியன் கைகால்களை. ஆணவமே இந்தக் கை விலங்கு, கால் விலங்குகள். வீர சங்கிலி என்று மயங்கியிருப்பதெல்லாம் விலங்குச் சங்கிலிதான்.

'ஆணவச் சங்கிலியை அறுத்தெறிந்து மானுடம் என்ற மகா சமுத்திரத்தில் உருக்கலந்து போக வேண்டும்' என்பது மகாத்மா காந்தியின் புத்திமதி. ததியமுதில் உப்பைப் போல் கைங்கரியத்திலே கரைந்து போக வேண்டும் என்பது ஸ்ரீ வைஷ்ணவ லட்சணம்.

'நாம் தனிச் சிறப்போ, கௌரவமோ கொண்டிருக்கிறோம்' என்ற உணர்ச்சி நமக்கும் கடவுளுக்குமிடையே குறுக்குச் சுவர் எழுப்பி விடுகிறது' என்பது காந்தி வாக்கு. இந்த ஆணவக் குறுக்குச் சுவரே கடவுளை நாம் காண முடியாமல் மறைத்து விடுகிறது. இந்த 'நான்' 'நாம்' என்ற உணர்ச்சியை விட்டுப் பணிவதே இறைவனோடு ஒன்றுபட்டு வாழும் வழி என்றும் அடிகள் கூறியுள்ளார்.

கம்பன் கூறும் பிரகலாத சரித்திரத்திலே, பிரகலாதன் காட்டும் சரணாகதி தர்மத்திற்கு ஒரு 'ஸ்ரீ பாஷ்யம்' என்று கருதலாம், காந்தியடிகள் தமது வாழ்க்கையை ஒட்டிக் கூறியிருப்பதை.

அறிவினால் கடவுளோடு ஒன்றுபட்டு வாழ்வது அரிது. ஆணவத்தால் கடவுளைக் காண்பதோ, கடவுளுடன் ஒன்றுபட்டு வாழ்வதோ, முடியவே முடியாது. பணிவினால், வணக்கத்தால், சரணாகதியால் இறையருளோடு ஒன்றுபட்டு வாழ்வதே வழி – ராஜபாட்டை. இந்தப் பாதையில் போக இரணிய ஆணவம் இடம் கொடுக்குமா!

இரணிய நிலையையும் பிரகலாத நிலையையும் வேறொரு விதமாகப் பார்க்கலாம். இதுவும் காந்தி பார்க்கும் பார்வைதான்.

ஸர்வ சக்தி என்பது ஒரு மகாசமுத்திரம். பார்க்கும் இடம் எங்கும், பார்க்கமுடியாத இடங்களிலும், நீக்கமற நிறைகின்ற பரிபூர்ண ஆனந்த சமுத்திரம். இதை நினைவில் வைத்துக் கொண்டு காந்தி கூறுவதைக் கேட்போம்.

சமுத்திரத்தின் ஒவ்வொரு துளியும் தாய்க் கடலின் பெருமையில் (சக்தியில்) பங்கு கொண்டிருக்கிறது. அந்தத் துளிக்குத் தெரியாமலிருந்த போதிலும் இதுவே உண்மை நிலை. சமுத்திரத்தை விட்டுத் தனியானது தனிவாழ்வு வாழப்

பார்த்தால் வற்றி வறண்டு மாய்ந்து போக வேண்டியது தான். என்ன பொருத்தமான காட்சி – உபமானம்!

கடவுள் என்ற மகாசமுத்திரத்தில் ஒவ்வொருவரும் ஒரு துளியாக அடங்கியிருப்பதைச் சிந்தைசெய்யவேண்டும். இந்த அடக்கத்தை விட்டு, இரணியப் பெருந்துளி வணங்காமுடித் தன்மானத் தனிப்பெரு வாழ்வு வாழ முயல்கிறது. எத்தகைய பெருந்துளியானாலும் இறைவனைப் பிரிந்து வாழ்வதென்பது நீர்க்கோல வாழ்வு தானே!

பிரகலாத வாழ்வோ வணக்கத்தால், பணிவால், சரணாகதியால் இறையருளாகிய மகா சமுத்திரத்தின் இன்றியமையாத பகுதியாக வாழும் வாழ்வு. எனவே சிரஞ்சீவி வாழ்வு.

எதற்குச் சரணாகதி?

நான் கண்டு கொண்ட தனிப் பெரு வாழ்வு வாழக் கொடுத்து வைக்கவில்லையே இரணியனுக்கு! இது பிரகலாத உள்ளம். எனவே தான்,

வன்றொழில் ஆழி
 வேந்தை வணங்குதி;
 வணங்க வேஉன்

புன்றொழில் பொறுக்கும்

என்று உறுதி கூறிப் பார்த்தான். பலன்: வணங்காமுடி – ஆணவத்தை மேலும் நிமிரச் செய்து நிமிர் கொள்ளச் செய்ததுதான்!

பிரகலாதனுக்கு இரணியன் கூறும் விடை இலக்கிய அற்புதங்களில் ஒன்றுக் கவிதை புலகில் நிலைபெறத் தக்கது. ‘வணங்கவா! என் முடியா வணங்கும்! வணங்கத் தெரியாதே இந்த முடிக்கு!’ என்று விடை கூறியிருக்கலாம். ஆனால், இரணியன் சொல்வதென்ன!

பாட்டிலேயே கேட்டு விடுவோம் விடையையும், அந்தக் குரலையும்—அந்தத் தன்மானத் தனி வீரச் சிரிப்பையும் கூட:

‘கேள் இது: நீயும்
 காணக் கிளர்ந்தகோ
 ளரியின் கேழில்

தோளொடு தாளும்
 நீக்கி, நின்னையும்
 துணித்துப் பின்என்

வாளினைத் தொழுவ
 தல்லால், வணங்குதல்
 மகளிர் ஊடல்

நாளினும் உளதோ?’
 என்று, அண்டங்கள்
 நடுங்க நக்கான்.

[கிளர்ந்த – எழுந்து ஓங்கி வளர்ந்த. கோளரியின் – வலிய சிங்கத்தின். கேழ் இல் – ஒப்பற்ற. தாளும் – கால்களும். துணித்து – துண்டித்து. மகளிர் ஊடல் நாளினும் – காதற் பெண்கள் ஊடல் கொண்ட போதும். என்று – என்று சொல்லி. நக்கான் – சிரித்தான்.]

ஸர்வ சக்தி ஒன்று உண்டு என்பதில் சிறிதும் நம்பிக்கை இல்லாதவன். தன் சக்திக்குமேல் ஒரு சக்தி இருக்க முடியும் என்ற நம்பிக்கையே இல்லாதவன். ‘நான் அப்படிச் செய்து விடுவேன்; இப்படிச் செய்து விடுவேன்’ என்ற வாய் வீச்சிலும் வாள் வீச்சிலும் ஒருங்கே வல்லவன். அப்பேர்ப்பட்ட இரணியன் சரணாகதி செய்வதா? யாருக்கு? எதற்கு!


சிங்கத்தின் தோள் வலிமையை ஒப்புக்கொள்ளத்தான் செய்கிறான். ‘ஒப்பற்ற தோள்’ (கேழில் தோள்) என்கிறானல்லவா! எவ்வளவு விரைவாகத் தன் அசுர வர்க்கத்தைக் கருவறுத்து விட்டது!

அந்தத் தோள்களைத் தன் கையில் வெற்றி புரியும் வீர வாளால் வெட்டி வீசித் தள்ளிவிடுவேன் என்கிறான். ஓடிப் போகாதபடி அந்தக் கால்களையும் வெட்டப் போவதாகச் சொல்லுகிறான்.

இப்படிச் சிங்கத்தைக் குற்றுயிராகக் கிடத்துவதுதான் — கொல்வதல்ல! — உடனே இப்போது இரணியன் செய்ய விரும்பும் செயல். ஏனென்றால், இந்த ஹரி பார்க்க வேண்டுமாம் தன்னை நம்பிய பக்தன் துண்டிக்கப்படுவதை! எந்த ஹரியைப் பிரகலாதன் நம்பியிருக்கிறானோ அந்த ஹரி குற்றுயிராய்ச் செத்துக் கொண்டிருப்பதையும் பார்த்துக்கொண்டேதான் இந்தப் பிள்ளையும் சாக வேண்டுமாம்.

பிரகலாதனைத் துண்டிப்பதிலும் சித்திரவதைமுறையைத் தான் இரணிய உள்ளம் மேற்கொள்ள விரும்புவது போலத் தோன்றுகிறது. பக்தனும் பகவானும் ஒருவரையொருவர் தத்தம் பரிதாப நிலையில் பார்த்துக்கொண்டே செத்துப்போகவேண்டும் என்பது இரணியன் விருப்பம் — சங்கற்பம்!

இருவரும் கண்ணை மூடுவதற்கு முன் தங்களை வெட்டிய, இரத்தம் சொட்டும், விஜய வாளுக்கே இரணியன் சரணாகதி செய்வதையும் பார்த்துவிடவேண்டுமாம். இரணியன் மூளையில் உதிக்கின்ற கற்பனையைப் பாருங்கள்!



'தொழுவதே — சரணாகதி செய்வதே — உய்யும் வழி' என்று சொன்ன மைந்தனை நோக்கி இரணியன்,

வாளினைத் தொழுவ
தல்லால் வணங்குதல்
மகளிர் ஊடல்
நாளினும் உளதோ?

என்ற வினாவையல்லவா விடையாக உபயோகிக்கிறான்!

'காற்றில் ஏறி அவ்விண்ணையும் சாடுவோம். காதற் பெண்கள் கடைக் கண் பணியிலே!' என்று பாரதியார் காதலின் சக்தியைப் பாடியிருக்கிறாரல்லவா? அத்தகைய காதலுக்கும் பணிவதில்லையாம் இரணிய ஸர்வாதிகாரம். ராவண வீரத்திற்காவது காலில் விழுந்த குறை உண்டு என்பது குறிப்பு.

ஸர்வாதிகாரத்தை வென்று வலியழிக்கும் காதல் அல்லது காமமும் உண்டு, காதலை வென்று வலியழிக்கும் வணங்காமுடிப் பேராசையும் உண்டு. இந்த வணங்காமுடித் தனி வீரம் ராவணனுக்கும் உரியதன்று; இரணியனுக்கே உரியது.

ஓர் அன்னிய சக்கரவர்த்தியை வணங்குமாறு வற்புறுத்தப்பட்ட ஒரு வீரன், 'இந்த வணங்காமுடி, மகாதேவனுடைய சந்நிதியிலேதான் வணங்கும். வேறு இடங்களில் சற்றும்

தாழ்வதில்லை' என்றானும். ராவணனோ சீதைமீது ஆசை கொண்ட நிலையில் 'இந்த வணங்கா முடி காதலின் சந்நிதியில் தான் வணங்கும். மற்றப்படி ஈச்வர சந்நிதியிலும் வணங்காது!' என்று சொல்லக் கூடும்.

இரணியனோ, 'பிரணவ கலசமாகிய உடல்-முதிர்ச்சி வேளையிலும் வணங்குவதில்லையே நமது வணங்காமுடி! நம்மைக் காட்டிலும் வேறொரு தெய்வம் உண்டென்று நம்பி வணங்குவதும் உண்டோ!' என்று பெருமையடித்துக் கொள்கிறான் எனினும் 'என் வாளினைத் தொழுவேன்!' என்கிறான்.

தெய்வம் இல்லாவிட்டால் பயமே தெய்வமாகி விடும் என்பர். இறைவனைத் தொழுவதில்லை என்று சர்வங் கொண்டிருக்கும் இரணியன், 'என் வாளினைத் தொழுவேன்!' என்கிறான்.

தெய்வ பலத்தைத் தொழவில்லையென்றால், வாளையோ, வேறு கொலைக் கருவியையோ தொழ வேண்டிய நிலை, நிர்ப்பந்தம் ஏற்பட்டு விடுகிறது.

இன்ப நெறியும் துன்ப நெறியும்

மிருக பலத்தையே நம்பி வாழ்ந்தவன் மிருக பலத்தினாலேயே கொல்லப்படுகிறான். 'வாளை எடுப்பவன் வாளினால் அழிகிறான்' என்பது கிறிஸ்து மதக் கொள்கை.

'கடிக்கிறவன் கடிக்கப்படுவான் — இது சட்டம்' என்று ஆங்கிலத்தில் கூறுவதுண்டு. இரணியன் கதையில் இந்தச் சட்டம் எவ்வளவு பயங்கரமாகத் தன்னை மெய்ப்பித்துக் கொள்கிறது!

ஏழு கவிகளில் இரணியன்வதை விவரிக்கப்படுகிறது. அந்தக் கட்டத்தை நோக்குவதற்குமுன் பிரகலாதனது சரணாகதி தருமத்தின் உட்பொருளை மேலும் சற்று ஊடுருவிப் பார்க்கலாம்.

வன்னெறியில் ஆழி
வேந்தை வணங்குதி;
வணங்க வே உன்
புன்னெறியில் பொறுக்கும்

என்றானே, அந்த வணக்கத்தின் உட்பொருளைத்தான்.

மனமெய் மொழிகளில் ஸர்வ சக்தியின் உண்மை கண்டு வணங்கவே, உள்ளும் புறமுமாக இருக்கும் அந்த ரட்சக சக்தியின் அருளால சரணாகதனின் உள்ளம் திருந்தி நல்வழியில் படரத் தொடங்குகிறது. பொறுத்துப் பொறுத்துப் பார்த்துக்கொண்டிருக்கும் சக்தி ஸாராம்சத்தில் அன்பு மயமாக இருப்பதால், மேலும் மேலும் பொறுத்துப் பொறுத்துப் பார்க்கச் சித்தமாயிருக்கிறதாம்.

'உண்மையான வணக்க நிலையில் (சரணாகதி நிலையில்) சும்மா இருக்க முடியாது; சோம்பித் திரிய முடியாது' என்பர் காந்தியடிகள். தன்னலத்திலேதான் சோம்பியிருக்கத் தோன்றும்!

கைங்கரிய ரூபமான உலகப் பணியில் சரணாகதன் சோம்பியிருக்கவே முடியாது. மனமெய் மொழிகளில் சரணாகதி, மனமெய்மொழிகளில் இடைவிடாத கைங்கரியமாகப் பரிணமிக்கும். இந்த நிலையைக் காந்தியடிகள் தெளிவாக வற்புறுத்தியுள்ளார்.

இதுவே வாழும் முறை, இன்பநெறி, இதனோடு முரண்பட்டுச் செல்லும் ஆணவ வழி துன்ப வழியே.

* * *

துன்ப வழியாகிய ஆணவ வழியையே பெருவழியாகப் பிடித்திருக்கிறான் இரணியன். இதனால்தான் பிரகலாதன் உபதேசிக்கும் 'வாழும் முறை'யை இரணியனால் ஒப்புக் கொள்ள இயலவில்லை.

“வணங்குதி; வணங்கலே...' என்று பிள்ளை சொன்னது கோபத்தை அதிகரிக்கச் செய்கிறது. 'புன்னெறியில்' என்று இரணியனது ஆணவச் செயல்களைக் குறிப்பிட்டதும் கோபத் தீக்கு விறகு போட்டதாகவே முடிந்தது.

'வன்னெறியில்' என்று நரசிங்க மூர்த்தியின் செயலை இரணியனது 'புன்னெறி'யுடன் முரண்பட வைத்துக் கூறியதை எப்படித்தான் பொறுக்க முடியும்!

இரணிய வேந்தனிடம் 'ஆழிவேந்தை'ப் பிரகலாதன் அறிமுகப்படுத்திய விதமே தன்மானத்தைப் புண்ணாக்க, 'இனி என் வாளுக்கு இருவரும் இரை!' என்கிறான் இரணியன்.

'நரசிங்கத்தையும் பிரகலாதனையும் பலி கொண்ட வாளுக்கே நான் சரணாகதி செய்யப் போகிறேன்!' என்று கூறுவதைக் காட்டிலும் பிரகலாதனது சரணாகதி தருமத்தைப் பழித்துக் கூற முடியுமா? எனினும் இந்தப் பழிப்புரையிலேயே, வாளை நம்புகிறவனது பரிதாப நிலையும் நன்கு புலனாகிறது இல்லையா!